# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**27.09.2023ந் தேதி நடைபெற இருந்த திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற சாதாரணக் கூட்டம் நிர்வாக காரணமாக 03.10.2023ந் தேதிக்கு மாற்றப்பட்டு 03.10.2023ந் தேதி நடைபெற்றது.**

## நிகழ்ச்சி நிரல்

**தீர்மானம் எண்:**632 இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் இஸ்ரோவில் சந்திரியான்–3 குழுவில் தமிழகத்தை சேர்ந்த 9 விஞ்ஞானிகள் இடம் பெற்றிருந்தனர்.அதில் 6பேர் அரசுப்பள்ளியில் தமிழ்வழி கல்வி பயின்றவர்கள் மேற்படி 9 விஞ்ஞானிகளுக்கும் தமிழக அரசின் சார்பில் பாராட்டி ரூ.25.00இலட்சம் ரொக்க பரிசு வழங்கி கௌவுரவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இம்மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என தெரிவித்தார்.

**தீர்மானம் எண்:**633 மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இம்மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என தெரிவித்தார்.

**பொருள்: 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவற்கு (Phase IV ) அரசாணை எண். 125 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.09.2023ல் ரூ.221.39 கோடிக்கு கீழ்கண்ட நிதியாதரங்களின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. விவரம் பின்வருமாறு.

(Rs in Crore )

| Sl.No | Name of the Project | Approved Project Cost | Fund Sharing Pattern | | |
|---|---|---|---|---|---|
| | | | GoI Share | GoTN Share | ULB Share /EAP |
| 1 | Under Ground Sewerage Scheme for left out areas of Tiruchirappalli City Municipal Corporation (Phase IV) | 221.39 | 73.06 | 66.42 | 81.91 |

மேற்கண்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :–

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/ 9245/2023 (மையம்)

**தீர்மானம் எண்:634 பொருள் :1 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**ABSTRACT**

Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 – Municipal Corporations and Municipalities - Underground sewerage schemes in left out/added areas of Tiruchirappalli and Tiruppur City Municipal Corporations at a total project cost of Rs.401.13 crore; Six (6) projects of 'Development of green spaces/parks in various Municipalities at a total project cost of Rs.2.04 crore - Approved in the 8th meeting of the State High Powered Steering Committee held on 31.07.2023 – Administrative sanction accorded – Orders – Issued

---

**Municipal Administration and Water Supply (MA2) Department**

**G.O.(Ms)No.125** **Dated: 02.09.2023**

திருவள்ளுவராண்டு,2054

சோபகிருது, ஆவணி 16

**Read:**

1. G.O.(Ms)No.139, Municipal Administration and Water Supply Department, dated 29.12.2021.
2. Minutes of the 8th meeting of the State High Powered Steering Committee (SHPSC) of Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 held on 31.07.2023.
3. From the Mission Director, Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 and the Additional Chief Secretary / Chairman and Managing Director, Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited Letter No.TUFIDCO/AMRUT 2.0/ 490/AM(M)/2022-23,dated 4.8.2023.

******

**ORDER:**

The Ministry of Housing and Urban Affairs, Government of India has launched the "Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0" (AMRUT 2.0) on 01.10.2021. The key components of the Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 are (a) Universal coverage of water supply (b) Sewerage, Septage management and recycle / reuse of treated used water (c) Rejuvenation of water bodies (including urban wet lands) and creation of green spaces.

**2.** Administrative sanction for implementation of Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0. in the State has been accorded and the State High Powered Steering Committee (SHPSC) headed by the Chief Secretary to Government has been constituted for the approval of the Projects under the Mission, vide the Government Order first read above.

**3.** In the letter third read above, the Mission Director, Atal Mission for Rejuvenation and Urban Transformation and the Additional Chief Secretary / Chairman and Managing Director, Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited has stated that, the State High Powered Steering Committee (SHPSC) of Atal Mission for Rejuvenation and Urban

Transformation 2.0 during its 8th meeting held on 31.07.2023 has approved the following projects for Municipal Corporations and Municipalities:

**I. Underground sewerage schemes in Tiruchirappalli and Tiruppur City Municipal Corporations.**

Underground sewerage schemes for Tiruchirappalli and Tiruppur City Municipal Corporations proposed by the Director of Municipal Administration at a total project cost of Rs.401.13 crore, under Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 – Tranche-II, subject to the conditions specified in the appraisal report of the respective projects. The details of the projects are given below:

**(Rs.in crore)**

| Sl. No. | Name of the Project | Approved Project cost | Fund Sharing Pattern | | |
|---|---|---|---|---|---|
| | | | GoI Share | GoTN Share | ULB Share / EAP |
| 1. | Underground sewerage scheme for left out areas of Tiruchirappalli City Municipal Corporation (phase IV) | 221.39 | 73.06 | 66.42 | 81.91 |
| 2. | Underground sewerage scheme to the added Areas of Tiruppur City Municipal Corporation (Zone-11,11.1 and 11.3) | 179.74 | 59.31 | 53.92 | 66.51 |
| | **Total** | **401.13** | **132.37** | **120.34** | **148.42** |

The components of the proposed underground sewerage system projects are, collection system, including lift machine holes; lift station; pumping station; conveying gravity mains and sewage pumping mains.

**II. Development of Green Spaces'/Parks' projects to Municipalities**

Six (6) projects of 'Development of green spaces'/parks' to Municipalities [Arcot, Ponneri, Tirupathur, Idappadi and Dharapuram (two parks)] proposed by the Director of Municipal Administration at a total project cost of Rs.2.04 crore under Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0, subject to the conditions specified in the appraisal report of specific projects. The details of the projects are given below:

**(Rs.in crore)**

| Sl. No. | Name of the Municipality | Name of the project | Approved project cost | Fund sharing pattern | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | GoI Share | GoTN Share | ULB share /KNMT |
| 1. | Arcot | Development of Green space at Devi Nagar in ward No.A, Block-32,TS.No.20 in ward No.03 | 0.61 | 0.07 | 0.18 | 0.36 |
| 2. | Ponneri | Development of Green space at GVN Nagar, ward No.22, TS.No.200/2A | 0.19 | 0.07 | 0.06 | 0.06 |
| 3. | Tirupathur | Development of Green space at Gowthampettai in ward No.2, Block-19, TS.No.1874/ 2, ward No.26 | 0.28 | 0.07 | 0.08 | 0.13 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **4.** | Idappadi | Development of Green space at Housing Board Phase-II, ward No.22, (SF.No.442/2p) | 0.26 | 0.07 | 0.08 | 0.11 |
| **5.** | Dharapuram | Development of Park at Sivasakthi Nagar, survey ward No.4, Block No.2, TS.No.77/6 in ward No.14 | 0.39 | 0.07 | 0.12 | 0.20 |
| **6.** | Dharapuram | Development of Park at VIP Nagar, survey ward No.4, Block no.2, T.S.No.35/8 in ward No.2 | 0.31 | 0.07 | 0.09 | 0.15 |
| | | **Total** | **2.04** | **0.42** | **0.61** | **1.01** |

The proposed green space and park projects are to be developed as per the aspirations of the citizen which would help in improving the environmental, aesthetic and health needs of the urban dwellers and comprise of necessary facilities including required greeneries; foot path; children play area; toilet and lighting etc.

**4.** Accordingly, the Mission Director, Atal Mission for Rejuvenation and Urban Transformation and the Additional Chief Secretary / Chairman and Managing Director, Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited has requested the Government to issue necessary administrative orders for the above projects.

**5.** The Government after careful examination of the proposal of the Additional Chief Secretary / Chairman and Managing Director, Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited, have decided to accept the same and accordingly issue administrative sanction for implementation of underground sewerage schemes in left out areas/added areas of Tiruchirappalli and Tiruppur City Municipal Corporations at a total project cost of Rs.401.13 crore; and six (6) projects of 'Development of green spaces/parks in various Municipalities at a total project cost of Rs.2.04 crore under Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0, as approved in the 8th meeting of the State High Powered Steering Committee held on 31.07.2023, detailed at paragraph 3 above.

**6.** This order issues with the concurrence of the Finance Department vide its U.O No.29298/ Fin (Infra-III)Dept/2023, Dated 02.09.2023.

**//BY ORDER OF THE GOVERNOR //**

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**To**

The Mission Director, Atal Mission for Rejuvenation and Urban Transformation and Additional Chief Secretary/Chairman and Managing Director, Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited,
Chennai – 600 035.
The Director of Municipal Administration, Chennai- 600 028.
The Managing Director, Tamil Nadu Water Supply and Drainage Board,
Chennai – 600 005.
The Accountant General (A&E), Chennai – 600 018.
The Accountant General (Audit), Chennai – 600 018.

**Copy to :**

The Office of the Hon'ble Chief Minister, Chennai – 600 009.



The Special Personal Assistant to the Hon'ble Minister for Municipal Administration, Chennai – 600 009.
The Principal Private Secretary to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Chennai – 600 009.
The Finance (Infra III) Department, Chennai – 600 009.
The Municipal Administration and Water Supply (OP II, SS&FC, MC5, MC6) Department, Chennai – 600 009.

**//FORWARDED BY ORDER//**

2/9/23

**SECTION OFFICER**

**பொருள்:2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மாநில நிதிக்குழு மான்யம் (**CGF**) 2022–23ன் கீழ், வார்டுக்குழு அலுவலகம் எண்.04, வார்டு எண்.56, 57 & 58க்குட்பட்ட கொல்லாங்குளத்தினை (கருமண்டபம் பகுதி மற்றும் எடமலைப்பட்டி புதூர் பகுதி) மேம்படுத்தி, அழகுப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு அரசாணை எண்.32 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.08.2023ல் ரூ.26.40 கோடிக்கு கீழ்கண்ட நிதியாதரங்களின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது விபரம் பின்வருமாறு.

| **Sl No** | **Name of the work** | **Amount sanctioned under CGF 2022-23 (Rs.in crore)** |
|---|---|---|
| 1 | Revitilization of Karumandapam Area | 8.915 |
| 2 | Revitilization of Edamalaipatty pudhur Lake Area I | 8.92 |
| 3 | Revitilization of Edamalaipatty pudhur Lake Area II | 6.46 |
| 4 | Beneficiary's Constribution | 2.10 |
| | **Total** | **26.40** |

மேற்கண்ட அரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/ 9436/2022(மையம்)**

தீர்மானம் எண்:635 பொருள் :2 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

## ABSTRACT

Tiruchirappalli Corporation – Revitalization of Kollankulam lake at Karumandapam and Edamalaipatty Pudhur Side in Tiruchirappalli Corporation under Capital Grant Fund for 2022-2023 – Administrative Sanction for Rs.24.30 crore- Orders - Issued.

---

**Municipal Administration and Water Supply (M.C.5) Department**

**G.O. (4D) No.32** **Dated 11.08.2023**

திருவள்ளுவராண்டு 2054
சோபகிருது, ஆடி – 26

**Read:-**

From the Director of Municipal Administration, Letter ROC.No.29404/2022/SS2, dated 28.04.2023

******

**ORDER:**

In the letter read above, the Director of Municipal Administration has stated that the Revitalization of Kollankulam lake at Karumandapam and Edamalaipatty Pudhur side in Tiruchirappalli Corporation at an appraised cost of Rs.26.40 crore was placed in the 2nd Empowered Committee Meeting of Capital Grant Fund –Operation and Maintenance Gap Filling Fund for the year 2022-2023 on 06.04.2023 for sanction as detailed below:-

| Sl. No | Name of the Work | Amount sanctioned under CGF 2022-23 (Rs. in crore) |
|---|---|---|
| 1. | Revitilization at Karumandapam Area | 8.915 |
| 2. | Revitilization at Edamalaipatty pudhur Lake Area I | 8.92 |
| 3. | Revitilization at Edamalaipatty pudhur Lake Area II | 6.46 |
| 4. | Beneficiary's Contribution | 2.10 |
| | **Total** | **26.40** |

**2**. Further, the Director of Municipal Administration has also stated that the Committee after detailed deliberation, resolved to accord in-principle approval to the above proposal subject to the following conditions:-

i. The entire lake to be rejuvenated as a single package,
ii. Feasibility of constructing an over bridge across the Railway line to connect both sides of the lake may be explored,
iii. Concrete / steel structures should be limited to the barest minimum,

iv. Water holding capacity / water spread area should not be reduced.

v. Beneficiary's contribution may not be funded under Capital Grant Fund.

As per the Committee's resolution, the Beneficiary's contribution of Rs.2.10 crore is not included in the total estimate (Rs.26.40-Rs.2.10=Rs.24.30 crore).

**3**. Therefore, the Director of Municipal Administration has requested the Government to accord administrative sanction for Revitalization of Kollankulam lake at Karumandapam and Edamalaipatty Pudhur side in Tiruchirappalli Corporation under Capital Grant Fund for the year 2022-2023 at an appraised cost of Rs.24.30 crore (excluding the Beneficiary's contribution).

**4**. The Government, after careful examination, have decided to accept the proposal of the Director of Municipal Administration and to accord administrative sanction for Revitalization of Kollankulam lake at Karumandapam and Edamalaipatty Pudhur side in Tiruchirappalli Corporation under Capital Grant Fund for the year 2022-2023 at an appraised cost of Rs.24.30 crore (Twenty Four crore and Thirty Lakhs only) excluding the Beneficiary's contribution.

**5**. This order issues with the concurrence of the Finance Department vide its U.O.No.28472/ Finance (Infra-III)/2023, dated 10.08.2023.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**D.KARTHIKEYAN**
**PRINICPAL SECRETARY TO GOVERNMENT**

**To**

The Director of Municipal Administration, Chennai – 600 028.
The Commissioner, Tiruchirappalli Corporation, Tiruchirappalli.
The Accountant General (A&E), Chennai – 600 018.
The Director of Local Fund Audit, Chennai – 600 035

**Copy to:-**

The Hon'ble Chief Minister Office, Chennai – 600 009.
The Senior Personal Assistant to the Hon'ble Minister (Municipal Administration), Chennai – 600 009.
The Principal Private Secretary to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Chennai – 600 009.
The Finance (Infra-III) Department, Chennai – 600 009.
The Municipal Administration and Water Supply (OP.II) Department, Chennai – 600 009.

**// FORWARDED BY ORDER //**

சா. சாமிநாதன்
11/8/2023
**SECTION OFFICER**
11/8/2023

**பொருள்:3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 4, வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூரில் புதிதாக 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு அரசாணை எண். 54 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.05.2023ல் ரூ.216.20 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அடல் மிஷன் புணரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றம் ( AMRUT 2.0) திட்ட நெறிமுறைகளின் படி செயல்படுத்திடவும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, சென்னை அவர்களின் கடிதம் எண். TNUDF/Projects/SMIF–TN–III/Trichy STP. Date. 25.08.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு கீழ்கண்ட நிதி ஆதரங்களின் படி பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| Sl.No | Details | Amount (Rs in Crore) | Percentage |
|---|---|---|---|
| 1 | GoI Share as Grant under AMRUT 2.0 | 71.35 | 30.51 % |
| 2 | GoTn Share as Grant under AMRUT 2.0 | 64.86 | 27.73 % |
| 3 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF–TN–III | 48.83 | 20.88 % |
| 4 | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under KfW assisted SMIF – TN– III | 48.83 | 20.88 % |
| | Total | 233.87 | 100.00 % |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள நிதி ஆதரங்களின் படி, அம்ரூத் திட்ட வழிகாட்டுதல்களின் படி பணிகளை மேற்கொள்ளவும், விரிவான திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு புதைவடிகால் சேவைக் கட்டணத்தை கீழ்கண்ட விவரப்படி வசூல் செய்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சதுர. அடிகளில் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை | உத்தேசிக்கப்பட்ட வைப்புத் தொகை கட்டணம் ரூபாயில் | | | உத்தேசிக்கப்பட்ட சேவைக்கட்டணம் ரூபாய் / மாதம் ஒன்றுக்கு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வீட்டு பயனுக்கு | வணிக பயனுக்கு | தொழிற்சாலை | வீட்டு பயனுக்கு | வணிக பயனுக்கு | தொழிற்சாலை |
| 1 | <600 | 7500 | 15000 | 15000 | 100 | 300 | 300 |
| 2 | 601–1200 | 10000 | 20000 | 20000 | 140 | 420 | 420 |
| 3 | 1201–1800 | 12500 | 25000 | 25000 | 180 | 540 | 540 |
| 4 | 1801 –2400 | 15000 | 30000 | 30000 | 220 | 660 | 660 |

- 2401* சதுர அடிக்கு மேல் உள்ள பிளின்ட் (Plinth) பகுதிக்கான வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் Plinth பகுதியின் அதிகரிப்புக்கு ஏற்ப விகிதச்சார அடிப்படையில் அதிகரிக்கப்படும்.
- வீட்டு பயனுக்கு 1 ச.அடிக்கு ரூ .6.25 வீதம் 2401 ச.அடிக்கு மேல் வைப்புத் தொகை கட்டணம் வசூல் செய்யப்படும்.
- வணிகம் மற்றும் தொழிற்சாலை பயனுக்கு 1.ச.அடிக்கு ரூ .12.50 வீதம் 2401 ச.அடிக்கு மேல் வைப்புத் தொகை கட்டணம் வசூல் செய்யப்படும்

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :–

1, ஒப்புதல் அளிக்கலாம்.
2. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் , தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி , சென்னை அவர்களது கடிதம் Roc.No. TNUDF/ Projects/SMIF–TN–III/Trichy STP. Date. 25.08.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் அம்ரூத் 2.0 திட்ட வழிகாட்டுதல்களின் படி பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. இத்திட்டம் மத்திய /மாநில அரசால் வழங்கப்படும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
4. மேற்படி திட்டம் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்பந்த பத்திரத்திலும் மாநகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை அளித்து அனுமதி அளிக்கலாம்.

இ7/1933/2022(மையம்)

**தீர்மானம் எண்:636 பொருள் :3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது..**

**பொருள்:4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டும் , போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் , பஞ்சப்பூர் முதல் கரூர் புறவழிச்சாலை வரையிலான கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆறு கிழக்கு கரையில் தார்சாலை அமைக்கும் பணியினை ரூ.346.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை M/s. InfraEn India Pvt Ltd., Bangalore நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் மேற்கண்ட திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு உரிய நிதியினை அரசிடமிருந்து பெறுவதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட பணியினை ரூ .346.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியினை அரசிடமிருந்து பெறுவதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட திட்டப்பணிக்கான நிதி ரூ .346.00 கோடியினை அரசிடமிருந்து பெற்று மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு அனுமதி அளிக்கலாம்.

இ1/7964/2022(மையம்)

**தீர்மானம் எண்:637 பொருள் :4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மையஅலுவலகம் இயங்கி வரும் கட்டிடமானது, திருச்சிராப்பள்ளி நகராட்சியாக இருந்த போது, 1963ம் ஆண்டு (29.12.1963) கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.03.1994ன் படி, முந்தைய திருச்சிராப்பள்ளி நகராட்சி, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து, இக்கட்டிடத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மையஅலுவலகம் செயல்பட்டு வருகிறது. இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 58 வருடங்கள் கடந்து விட்டது.

மைய அலுவலக வளாகத்தின் மொத்தப் பரப்பளவு 210498.63 சதுரடி ஆகும், இதில் மையஅலுவலக கட்டுமானத்தின் மொத்தப் பரப்பளவு 27057.10 சதுரடி ஆகும்.

தற்போது இம்மைய அலுவலகத்தில் மாண்புமிகு மேயர் அறை, மாண்புமிகு மேயர் கூட்ட அரங்கு, மாமன்ற கூட்ட அரங்கு, துணை மேயர் அறை, ஆணையர் அறை, ஆணையர் கூட்ட அரங்குகள், நகரப்பொறியாளர் அறை, நிர்வாக பொறியாளர்கள் அறை, நகர்நல அலுவலர் அறை, பொதுசுகாதார பிரிவு, உதவி ஆணையர்(கணக்கு) அறை, கணக்குப்பிரிவு, துணை ஆணையர்கள் அறை, உதவி ஆணையர்(வருவாய்) அறை, வருவாய் பிரிவு, உதவி ஆணையர்(பணிகள்) அறை, உள்ளாட்சி உடன்நிகழ் தணிக்கைத் துறை துணை இயக்குநர் அறை, உதவி செயற்பொறியாளர்(இயந்திரம்) அறை, மின்பொறியாளர் அறை, பொறியியல் பிரிவு, திட்டப்பிரிவு, வரைவாளர்கள் பிரிவு, பொதுப்பிரிவு அலுவலகம், தணிக்கை பிரிவு, தேர்தல் சிறப்பு துணை வட்டாட்சியர் அறை, வரிவசூல் மையங்கள், ஆதார் சேவை மையம், கணினி கட்டுப்பாட்டு அறை, கோப்புகள் பதிவு அறை, எழுதுபொருட்கள் பாதுகாப்பு அறை, வரவேற்பு அறை, தொலைப்பேசி கட்டுப்பாட்டு அறை, ஜெனரேட்டர் அறை, மின்சார கட்டுப்பாட்டு அறை, உணவகம், மாநகராட்சி ஓய்வு அலுவலர்கள் சங்க அறை மற்றும் வாகன ஓட்டுநர்கள் ஓய்வு அறை ஆகியவை இயங்கி வருகிறது.

வார்டு மறுவரையறைக்கு பின்னர் தற்போது திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மொத்தம் 65 வார்டுகள் உள்ளது.

இம்மைய அலுவலக கட்டிடத்தில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வுக்கூட்டம் நடத்துவதற்கு போதுமான இடவசதியுடன் கூடிய கூட்ட அரங்கு இல்லாமல் இருப்பதாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களது வாகனங்கள் வந்து செல்வதற்கு போதுமான இடவசதி இல்லாமல் இருப்பதாலும், இவ்வலுவக வளாகத்திற்குள் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு மையம் அமைக்கப்பட்டுள்ளதாலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு, மைய அலுவலகத்தின் வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது மேலும் மாநகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு மாமன்ற கூட்ட அரங்கு மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இம்மைய அலுவலக வளாகத்திற்குள் கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டப் பணியினை ரூ.41.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை M/s. Vijay Architects, திருச்சி நிறுவனம் தயார் செய்துள்ளது.

எனவே இம்மாநகராட்சி மைய அலுவலகத்திற்குள் ரூ.41.37 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டப்பணியினை மேற்கொள்வதற்கும், அரசிடம் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் இத்திட்டப்பணிக்குரிய நிதியினை அரசிடமிருந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டு , மையஅலுவலகத்திற்குள் ரூ .41.37 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டப் பணிக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்க அனுமதி அளிக்கலாம்.
2. இத்திட்டப்பணிக்கான நிதி ரூ .41.37 கோடியினை அரசிடமிருந்து பெ ற்று திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்க அனுமதி அளிக்கலாம்.
3. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொ டர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி அளிக்கலாம்.

**இ1/3440/2022(மையம்)**

**தீர்மானம் எண்:638 பொருள் :5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்-4, வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் 2021-22ம் ஆண்டு நிதியாண்டில் புதியதாக நவீன எரிவாயு தகனமேடை அமைப்பதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முழுவதுமாக முடிவடைந்து விட்டது.

மேற்கண்ட நவீன எரிவாயு தகனமேடை பஞ்சப்பூர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது. மேலும் மேற்கண்ட எரிவாயு தகன மேடைக்கு செல்வதற்காக கரூர்-காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்வதற்கு ஏதுவாக புதிய அணுகு சாலை அமைக்க வேண்டியது அவசியமாகிறது.

எனவே மேற்கண்ட பகுதியில் அணுகு சாலை அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.53.25 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீடு தொகை ரூ .53.25 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவின தொகையினை 2023-24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் **(4103003) சாலைப் பணிகள் – சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் / பழைய சிமெண்ட் கான்கீரிட் தளத்தை மேம்படுத்துதல்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.500.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 8327 /2023/(மையம்)**

**தீர்மானம் எண்:639 பொருள் :6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.53க்குட்பட்ட குதுப்பா பள்ளம் நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டிடம் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

எனவே இக்கட்டிடத்தினை பாதுகாத்திட ஏதுவாக, சுற்றுச்சுவர் கட்டுதல், வெளிப்புற கிரானைட் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.57.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீடு தொகை ரூ .57.85 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையினை 2023–24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் **(4102001) ஒருங்கிணைந்த அரசு அலுவலக கட்டிடம் கட்டும் பணி** என்ற தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டில் இருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனு மதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 8539 /2023/(மையம்)**

**தீர்மானம் எண்:640 பொருள் :7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.4, வார்டு எண்.56க்குட்பட்ட ஆர்.எம்.எஸ் காலனி பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து, வண்டல் மண் நிரப்பியுள்ளதால் மழைநீர் வடிந்து செல்லாமல் தேங்கி தெருக்களில் வெளிவரும் சூழல் நிலவி வருகிறது.

இவ்வடிகால் அப்பகுதியினை சுற்றியுள்ள தெருக்களில் இருந்து வரும் மழைநீரை சேகரித்து வெளியேற்றும் முக்கியமான வடிகால் என்பதால், மேற்கண்ட மழைநீர் வடிகால் மராமத்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே பொதுமக்கள் நலன் கருதியும், இப்பணியின் அவசர அவசியம் கருதியும் ஆணையர் அவர்களின் நேரடி கள ஆய்வின் போது கூறிய அறிவுரையின்படி மேற்கண்ட ஆர்.எம்.எஸ் காலனி பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகால் திரும்ப கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.52.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இப்பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.52.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவின தொகையினை 2023–24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (4103101–1) மழைநீர் வடிகால் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.3250.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/8619/2023 / மையம்**

**தீர்மானம் எண்:641 பொருள் :8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்-4, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் புதிதாக கலைஞர் நூற்றாண்டு கட்டிடம் அமைப்பதற்கு மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களின் நேராய்வின்போது அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் புதிதாக கலைஞர் நூற்றாண்டு கட்டிடம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் தேவையான ஒப்பந்தப்புள்ளி படிவம், வரைபடம், Design. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஆகியவைகளை திட்ட கலந்தாலோசகர் (DPR Consultant) மூலம் தயார் செய்வதற்கு விருப்பணர்வு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் புதிதாக கலைஞர் நூற்றாண்டு கட்டிடம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் தேவையான ஒப்பந்தப்புள்ளி படிவம், வரைபடம், Design, ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஆகியவைகளை திட்ட கலந்தாலோசகர் (DPR Consultant) மூலம் தயார் செய்வதற்கு விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கு 2023-24ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 2205202 பொறியியற் கலந்தாலோசகர் கட்டணம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ .500.00 இலட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4/9196/2023/மையம்**

**தீர்மானம் எண்:642 பொருள் :9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் 05, வார்டு எண் 22க்குட்பட்ட தில்லைநகர் டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலையில் சாலைரோடு சந்திப்பு முதல் 7 வது குறுக்கு சாலை சந்திப்பு வரையில் புதைவடிகால் மற்றும் குடிநீர் குழாய் புனரமைக்கும் பணி நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் இச்சாலையில் வெளியூர் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லும் சாலையாகவும், மற்றும் முக்கிய பிரமுகர்கள் வந்து செல்லும் பாதையாக இருப்பதாலும் கீழ்கண்ட பகுதிகளில் பொதுநிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| | **வார்டு குழு அலுவலகம் V** | |
| 1 | வார்டு எண்.22க்குட்பட்ட தில்லைநகர் டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலை முதல் 7 வது குறுக்கு சாலை சந்திப்பு வரையில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி(086022R5365) Rech-1)<br>இ6/8537/2023 மையம் | 48.50 |
| 2 | வார்டு எண்.22க்குட்பட்ட தில்லைநகர் டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலையில் 7 வது குறுக்கு சாலை சந்திப்பு முதல் தென்னூர் சாலை சந்திப்பு வரையில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி ((086022R5365) Rech-2)<br>இ6/8538/2023 மையம் | 56.20 |

மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைகளுக்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மதிப்பீட்டுத் தொகைகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2023-24ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **பழைய தார்சாலைகளை புனரமைத்தல் (413004-2)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ.600.00 இலட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிகளின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/8537 / 2023 (மையம்)**

**தீர்மானம் எண்:643 பொருள் :10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , வார்டு குழு அலுவலகம் – V, வார்டு எண் .9க்குட்பட்ட மேட்டுத் தெரு பிரதான சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் மண் நிரப்புதல், மேடை அமைத்தல் , உடற்பயிற்சி கூடம் அமைத்தல் , பொருட்கள் வைப்பறை , கழிவறை மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல் ஆகிய மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ .60.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.60.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023–2024 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதியில் பள்ளிகளுக்கான விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்துதல் (4102001) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**( இ8 / 9068 / 2023(மையம் )**

**தீர்மானம் எண்:644 பொருள் :11 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் –IIக்குட்பட்ட பகுதியில் பொது நிதி 2023–24ன்கீழ், கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு வார்டு குழு 2ன் தீர்மானம் எண்.84 நாள்.31.07.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .206/2023–24ன் வாயிலாக 01.09.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.18க்குட்பட்ட விறகுப்பேட்டை நகர்புற நலவாழ்வு மைய (Urban wellness Centre) கட்டிடத்திற்கு சுற்றுச்சுவர், முகப்பு இரும்பு கதவு, சிமெண்ட் தளம் மற்றும் பெயர்பலகை அமைத்தல் போன்ற பணிகள்<br>**மதிப்பீடு ரூ.5.25 லட்சம்**<br>**இ3/ 6458 /2023 (மையம்)** | வி.ஜி.கிஷோர் பாலாஜி, திருச்சி மதிப்பீட்டு விலை (பேச்சு வார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளி விலையை காட்டிலும் 0.05 சதவீதம் குறைவு<br><br>ஜி.வெங்கடேஷ், திருச்சி 0.21% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.வி.ஜி.கிஷோர் பாலாஜி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டு விலையில் கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரை ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக் கோரியதில் **திரு.வி.ஜி.கிஷோர் பாலாஜி, திருச்சி** அவர்கள் தனது 07.09.2023ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி விலையை காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான விகிதத்தில் (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு பதிலாக ) செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு** **1.** வார்டு குழு 2ன் வார்டு குழு தீர்மானம் எண் .84 நாள்.31.07.2023ல் இப்பணிக்கான மதிப்பீடுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/ 6458 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்:645 பொருள் :12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் –IIக்குட்பட்ட பகுதியில் பொது நிதி 2023–24ன்கீழ், கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு வார்டு குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் .24.07.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொ டர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 85–1/2023–24ன் வாயிலாக 09.08.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீ ழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு க் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 2, போர் நினைவுச் சின்னம் மற்றும் காந்தி சந்தையில் அமைந்துள்ள மகாத்மா காந்தி திருஉருவச் சிலை ஆகிய இடங்களில் சுதந்திர தினவிழா சிறப்பாக கொண்டாட வண்ண விளக்குகள் பொருத்துதல் , ஒலிபெருக்கி அமைத்தல் மற்றும் அலங்காரம் செய்யும் பணிகள் வாடகை அடிப்படையில் அமைத்துக் கொடுக்கும் பணி<br>மதிப்பீடு ரூ.1.70 லட்சம்<br>இ3/ 8334 /2023 (மையம்) | **எஸ்.கிருபாகரன், திருச்சி**<br>0 .17% குறைவு<br>**ஆர்.சுரேஷ்குமார், திருச்சி**<br>3.58% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எஸ்.கிருபாகரன், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.17 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு** **1.**மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் குறைந்த ஒ ப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**இ3/8334/2023 (மையம்)**

**தீர்மானம் எண்:646 பொருள் :13 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , வார்டு குழு அலுவலகம் –IIக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன்கீழ், கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு வார்டுக்குழு 2ன் தீர்மானம் எண் .70 நாள்.27.06.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.165/2023–24ன் வாயிலாக 01.08.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.17, 18, 31க்குட்பட்ட இரட்டை வாய்க்கால் குறிஞ்சி கல்லூரி முதல் குழுமிக்கரை வரை மற்றும் கண்ணன் தோப்பு வாய்க்கால் ஆகியவைகளில் இயந்திரம் மூலமாக தூர்வாருதல் மற்றும் மண் துகள்களை அகற்றும் பணி<br>**மதிப்பீடு ரூ.3.90 இலட்சம்**<br>**இ3/5914/ 2023 (மையம்)** | என்.எஸ்.இன்ப்ரா எண்டர்பிரைசஸ், திருச்சி 0.14% குறைவு<br><br>கே.ராமசாமி, திருச்சி 0.43% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். என்.எஸ்.இன்ப்ரா எண்டர்பிரைசஸ்**, திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.14 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.30க்குட்பட்ட குப்பாங்குளம், எடத்தெரு மற்றும் முஸ்லீம் மேட்டுத் தெரு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களை மனித ஆற்றல் கொண்டு தூர்வாருதல் பணி<br>**மதிப்பீடு ரூ.3.25 இலட்சம்**<br>**இ3/5915/2023(மையம்)** | கே.மோகன், திருச்சி 0.24% குறைவு<br><br>சி.பட்டாபிராமன், திருச்சி 2.88% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. கே.மோகன்**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.24 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | வார்டு எண்.33க்குட்பட்ட கான்மியான் மேட்டுத்தெரு மற்றும் எடத்தெரு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களை மனித ஆற்றல் கொண்டு தூர்வாருதல் பணி<br>**மதிப்பீடு ரூ.3.15 இலட்சம்**<br>**இ3/5916/2023(மையம்)** | ஏ.அங்குசாமி, திருச்சி மதிப்பீட்டு விலை (பேச்சு வார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளி விலையை காட்டிலும் 0.05 சதவீதம் குறைவு<br><br>ஏ.ஜி.எஸ்.கான்ட்ராக்டர், திருச்சி 9.05% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.ஏ.அங்குசாமி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டு விலையில் கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரை ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக் கோரியதில் **திரு.ஏ.அங்குசாமி, திருச்சி** அவர்கள் தனது 02.08.2023ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி விலையை காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான விகிதத்தில் (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு பதிலாக ) செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு எண்.34க்குட்பட்ட சங்கிலியாண்டபுரம் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களை மனித ஆற்றல் கொண்டு தூர்வாருதல் பணி<br>**மதிப்பீடு ரூ.4.20 இலட்சம்**<br>**இ3/5917/2023(மையம்)** | பி.வெள்ளையம்மாள், திருச்சி 0.24% குறைவு<br><br>கே.சந்திரா, திருச்சி 2.28% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திருமதி.பி.வெள்ளையம்மாள்**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.24 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 5 | வார்டு எண்.50க்குட்பட்ட சந்தியாகப்பர் பாளையம் மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களை மனித ஆற்றல் கொண்டு தூர்வாருதல் பணி **மதிப்பீடு ரூ.1.15 இலட்சம் இ3/5918/2023(மையம்)** | ஏ.அங்குசாமி, திருச்சி மதிப்பீட்டு விலை (பேச்சு வார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளி விலையை காட்டிலும் 0.05 சதவீதம் குறைவு<br><br>ஏ.ஜி.எஸ்.கான்ட்ராக்டர், திருச்சி 5.89% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.ஏ.அங்குசாமி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டு விலையில் கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரை ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக் கோரியதில் **திரு.ஏ.அங்குசாமி, திருச்சி** அவர்கள் தனது 02.08.2023ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி விலையை காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான விகிதத்தில் (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு பதிலாக ) செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 6 | வார்டு எண்.47க்குட்பட்ட பகுதிகளின் வழியாக செல்லும் வாய்க்காலில் மனித ஆற்றல் கொண்டு தூர்வாரும் பணி **மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் இ3/5919/2023(மையம்)** | எல்.ராஜு, திருச்சி 0.46% குறைவு<br><br>கே.ராமசாமி, திருச்சி 0.70% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. எல்.ராஜு**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.46 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 7 | வார்டு எண்.48க்குட்பட்ட பகுதிகளின் வழியாக செல்லும் வாய்க்காலில் மனித ஆற்றல் கொண்டு தூர்வாரும் பணி **மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் இ3/5920/2023(மையம்)** | எல்.ராஜு, திருச்சி 0.10% குறைவு<br><br>கே.ராமசாமி, திருச்சி 0.70% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. எல்.ராஜு**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 8 | வார்டு எண்.59க்குட்பட்ட பகுதிகளின் வழியாக செல்லும் வாய்க்காலில் மனித ஆற்றல் கொண்டு தூர்வாரும் பணி **மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் இ3/5921/2023(மையம்)** | எல்.ராஜு, திருச்சி 0.10% குறைவு<br><br>கே.ராமசாமி, திருச்சி 0.20% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. எல்.ராஜு**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டுக்குழு 2 ன் தீர்மானம் எண்.70 நாள்.27.06.2023ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

இ3/ 5914 /2023 (மையம்)

**தீர்மானம் எண்:647 பொருள் :14 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் –IIக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன்கீழ், கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு பணிக்குழு தீர்மானம் எண்.43 மற்றும் 69 நாள்.11.07.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப் பட்டுள்ளதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .150/2023–24ன் வாயிலாக 01.08.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரி ந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.18க்குட்பட்ட பூக்கொல்லை பகுதியில் உள்ள நுண் உரம் செயலாக்க மையத்தில் மராமத்து பணி **மதிப்பீடு ரூ.9.50 இலட்சம் இ3/4837/2023(மையம்)** | **வி.முத்துராமன், திருச்சி** 0.15% குறைவு<br><br>**கே.சின்னசாமி, திருச்சி** 5.59% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. வி.முத்துராமன்**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.15 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47க்குட்பட்ட சுப்ரமணியபுரம் நகர்புற சுகாதார மையத்தில் மராமத்து பணி மதிப்பீடு **ரூ.9.90 இலட்சம் இ3/6456/2023(மையம்)** | **பி.ரவி, திருச்சி** 0.15% குறைவு<br><br>**பி.சங்கர், திருச்சி** 0.25% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. பி.ரவி**, திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.15 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு** **1.** பணிக்குழு தீர்மானம் எண்.43 மற்றும் 69 நாள்.11.07.2023ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**இ3/ 4837 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்:648 பொருள் :15 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , மண்டலம்–5க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணிகளை மேற்கொள்ள வார்டுக்குழு அலுவலக தீர்மான எண் .60, நாள்.28.06.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து , ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 196 / 2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 17.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | வார்டு எண்.10க்குட்பட்ட அச்சடிக்கார தெரு, மின்னப்பன் தெரு, நவாப் தோட்டம் மற்றும் சாலை ரோடு நெசவாளர் காலனி 1வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் மினி பவர் பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல்<br>**மதிப்பீடு ரூ.9.45 இலட்சம்**<br>**இ4/ 6437/2023/மையம்** | 1. திரு.P. மனோகர், திருச்சி<br>0.01% குறைவு<br><br>2. திரு.G.வெங்கடேஷ், திருச்சி<br>2.34% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.P.மனோகர், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2. | வார்டு எண்.11க்குட்பட்ட கீரைக்கொல்லை கழிப்பிடம் அருகில், கீரைக்கொல்லை மேன்ஷன் அருகிலும், இந்திரா நகர் மற்றும் சோழராஜபுரம் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் மினி பவர் பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல்<br>**மதிப்பீடு ரூ.9.45 இலட்சம்**<br>**இ4/ 6435/2023/மையம்** | 1.மெசர்ஸ்.CDR கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br>0.02% குறைவு<br><br>2. மெசர்ஸ்.GR & son's திருச்சி<br>1.07% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.CDR கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு வார்டுக்குழு அலுவலகம் –5ன் தீர்மான எண் .60, நாள்.28.06.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 6437/ 2023 / மையம்**

**தீர்மானம் எண்:649 பொருள் :16 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண்.45, நாள்.17.07.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து , ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 195 / 2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 17.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | மண்டலம் எண்.4. வார்டு எண்.56க்குட்பட்ட கருமண்டபம் நவீன தகன கூடத்தில், கதவு மற்றும் எரிவாயு சுத்தம் செய்யும் அமைப்பு ஆகியவற்றை பழுது நீக்கி மராமத்து செய்து கொடுக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.15.60 இலட்சம்** | 1. திரு.M.பாபுராஜ், திருச்சி<br>0.05% குறைவு<br><br>2. திரு.P.வேலுச்சாமி, திருச்சி<br>1.20% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.M.பாபுராஜ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண் .45, நாள்.17.07.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 7161/ 2023 / மையம்**

**தீர்மானம் எண்:650 பொருள் :17 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண்.5க்குட்பட்ட அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்து தூய்மையாக வைத்திடவும், வால்வுகளை இயக்கி பராமரித்தல் மற்றும் வால்வு தொட்டிகளை சுத்தமாக வைத்தல் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தினை தூய்மையாக வைத்தல் ஆகிய பணிகளை ஓராண்டிற்கு மேற்கொள்ள மதிப்பீடு ரூ.70.70 இலட்சத்திற்கு மாமன்றத் தீர்மான எண்.145, நாள்.26.07.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் 30.08.2022ல் பெறப்பட்டு, மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று மாமன்ற தீர்மான எண்.208, நாள்.29.09.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில், 01.10.2022 முதல் மேற்கண்ட நிறுவனம் கீழ்க்கண்ட நீர்தேக்க தொட்டியினை நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருகின்றனர்.

| வ. எண். | மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் பெயர் | கொள்ளளவு (இலட்சம் லிட்டர்) |
|---|---|---|
| 1. | மங்களம் நகர் | 5.00 |
| 2. | சிவா நகர் | 5.00 |
| 3. | புத்தூர் (பழையது) | 4.50 |
| 4. | கல்லாங்காடு | 1.00 |
| 5. | தெற்கு ராமலிங்க நகர் | 4.50 |
| 6. | UKT (பழையது) | 1.50 |
| 7. | உறையூர் (பழையது) | 10.00 |
| 8. | பாத்திமா நகர் | 6.00 |
| 9. | ரெயின்போ நகர் | 6.00 |
| 10. | செல்வ நகர் | 6.00 |

| | | |
|---|---|---|
| 11. | ஆனந்தம் நகர் | 12.00 |
| 12. | பாரதி நகர் | 12.00 |
| 13. | புத்தூர் (புதியது) | 20.00 |
| 14. | தில்லைநகர் | 20.00 |
| 15. | அண்ணா நகர் | 10.00 |
| 16. | பிராட்டியூர் | 1.00 |
| 17. | ஜெய நகர் | 4.00 |
| 18. | ஜங்ஷன் பொன்னகர் | 5.00 |
| 19. | உறையூர் (புதியது) | 18.00 |
| 20. | UKT (புதியது) | 2.50 |

இவ்வாறான நிலையில் மேற்கண்ட நீர்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணியானது வரும் 30.09.2023 உடன் முடிவடைய உள்ளது. மேற்கண்ட மாமன்றத் தீர்மான எண்.145, நாள்.26.07.2022ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்திடவும், ஒப்பந்த தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்குவதற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் **வார்டு குழு எண்.5க்குட்பட்ட மேற்கண்ட 20 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை** கடந்த ஓராண்டாக நல்ல முறையில் பராமரித்து வருவதால், மேலும் 6 மாதங்களுக்கு பராமரிக்க கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் **மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.5,87,528/-ல் 10 சதவீதம் ரூ.58,753/- உயர்த்துவதால் மாதம் ரூ.6,46,281/- வீதம் 6 மாதங்களுக்கு (01.10.2023 முதல் 31.03.2024 முடிய) ஏற்படும் செலவினம் ரூ.38,77,686/-ஐ** மேற்கொள்ளவும் அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. 01.10.2023 முதல் 31.03.2024 முடிய 6 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகையில் 10% உயர்த்தி ரூ.6,46,281/- வீதம் 6 மாதங்களுக்கு ஏற்படும் செலவின தொகை ரூ.38,77,686/- ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2023-24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) குடிநீர் வழங்கு பணிகள் - பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/9434/2022/மையம்**

**தீர்மானம் எண்:651 பொருள் :18 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை முதல்நிலை சேகரிப்பு பணியில் வீட்டுவாசலில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் 27 இலகுரக டிப்பர் வாகனங்களில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை 01.01.2023 முதல் 31.12.2024 வரையிலான காலத்திற்கு, பராமரிப்புப் பணி ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் (AMC) மேற்கொள் ள, இவ்வலுவலக உத்தரவு கடிதம் ந.க.எண். இ5/14877/2022(மை), நாள்:14.12.2022ன் படி M/s. V.S.T Motors Pvt Ltd., Trichy நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

தற்பொழுது இம்மாநகராட்சியில் முதல்நிலை சேகரிப்பு பணி யானது 10.06.2023 முதல் M/s. SR United Infra Developers, புதுக்கோட்டை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. M/s. V.S.T Motors Pvt Ltd., Trichy நிறுவனத்தாரின் பணி உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள 27 எண்ணிக்கை இலகுரக டிப்பர் வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மை முதல்நிலை சேகரிப்பு பணி க்கு மேற்கண்ட M/s. SR United Infra Developers, புதுக்கோட்டை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

எனவே, M/s. V.S.T Motors Pvt Ltd., Trichy நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட 27 எண்ணிக்கை இலகுரக டிப்பர் வாகனங்களில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் (AMC) மேற்கொள்ளும் பணிக்கான உத்திரவினை 10.06.2023 முதல் ரத்து செய்வதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

M/s. V.S.T Motors Pvt Ltd., Trichy நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட 27 எண்ணிக்கை இலகுரக டிப்பர் வாகனங்களில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணியினை ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் (AMC) மேற்கொள்ளும் பணிக்கான உத்திரவினை 10.06.2023 முதல் ரத்து செய்வதற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ 5/14877/2022(மை)

**தீர்மானம் எண் :652 பொருள் :19 இப்பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.12.15இலட்சத்தில் 01.01.2023 முதல் 09.06.2023 வரை பராமரிப்பு பணி மேற்கொண்டமைக்கு செலவீன தொகை ரூ.2.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை சேர்த்து அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:20**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 80 எண்ணிக்கை ஓட்டுநர்களை வழங்கும் பணிக்கு , நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ .728/– என்ற விலை விகிதத்தில் Thiru.R.Devarasan, Contractor Trichy, அவர்களுக்கு, இவ்வலுவலக உத்திரவு கடிதம் ந .க.எண்.இ5/4471/2023(மை), நாள்:24.06.2023ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது . இப்பணியானது எதிர்வரும் 30.09.2023ந் தேதியுடன் முடிவடைகிறது.

மேலும், இவ்வலுவலக கடிதம் ந .க.எண்.இ5/8083/2023(மை), நாள்:14.08.2023ன் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை , குடிநீர் விநியோகம் , புதைவடிகால் பராமரிப்பு , ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 142 எண்ணிக்கை ஓட்டுநர்களை வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 183 நாட்களுக்கு ரூ.230.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி அமர்த்திக் கொள்ள உரிய அனுமதி வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை இறுதி செய்திடும் வரை , ஏற்கனவே, அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்த விலை விகிதத்திலேயே, தொடர்ந்து ஓட்டுநர்களை வழங்குவதற்கு Thiru.R.Devarasan, Contractor Trichy, அவர்களிடம் நேரில் தெரிவித்ததன் அடிப்படையில் , மேற்படி Contractor தமது சம்மதத்தை 05.09.2023ந் தேதிய கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட பணியின் அத்தியாவசியத்தை கருதி 01.10.2023 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை இறுதி செய்திடும் வரை இம்மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை வழங்கும் பணியினை Thiru.R.Devarasan, Contractor Trichy, அவர்கள் மூலம் , ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ள விலை விகிதத்தின் படி நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ .728/– என்ற விலை விகித அடிப்படையில் கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 80 எண்ணிக்கை ஓட்டுநர்கள் வழங்கும் பணியினை Thiru.R.Devarasan, Contractor Trichy அவர்கள் மூலம் நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ. 728/– என்ற ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 01.10.2023 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை இறுதி செய்திடும் வரை தொடர்ந்து பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்து , மேற்படி பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவீனத்தை 2023–24ம் ஆண்டு வருவாய் நிதி செலவீனங்கள் ஊதியம் தலைப்பில் – கூலி இதர இனத்திற்கு என்ற கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.3200.00 இலட்சத்தில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**<u>இ5/4471/2023(மையம்)</u>**

**தீர்மானம் எண்:653 பொருள் :20 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:21**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , திடக்கழிவு மேலாண்மை , குடிநீர் விநியோகம் , புதைவடிகால் பராமரிப்பு , ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவைப்படும் 71 ஓட்டுநர்களை வழங்கும் பணிக்கு, நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ .728/- என்ற விலை விகிதத்தில் M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy நிறுவனத்தாருக்கு, இவ்வலுவலக உத்திரவு கடிதம் ந .க.எண்.இ5/4472/2023(மை), நாள்:23.06.2023ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணியானது எதிர்வரும் 30.09.2023ந் தேதியுடன் முடிவடைகிறது.

மேலும், இவ்வலுவலக கடிதம் ந .க.எண்.இ5/8083/2023(மை), நாள்:14.08.2023ன் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை , குடிநீர் விநியோகம் , புதைவடிகால் பராமரிப்பு , ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 142 எண்ணிக்கை ஓட்டுநர்களை வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 183 நாட்களுக்கு ரூ.230.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி அமர்த்திக் கொள்ள உரிய அனுமதி வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை இறுதி செய்திடும் வரை, ஏற்கனவே, அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்த விலை விகிதத்திலேயே , தொடர்ந்து ஓட்டுநர்களை வழங்குவதற்கு M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy நிறுவனத்தாரிடம் நேரில் தெரிவித்ததன் அடிப்படையில், மேற்படி நிறுவனத்தார் தமது சம்மதத்தை 05.09.2023ந் தேதிய கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்கண்ட பணியின் அத்தியாவசியத்தை கருதி 01.10.2023 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை இறுதி செய்திடும் வரை இம்மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை வழங்கும் பணியினை M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy நிறுவனத்தார் மூலம், ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ள விலை விகித்த்தின் படி நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ .728/- என்ற விலை விகித அடிப்படையில் கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , திடக்கழிவு மேலாண்மை , குடிநீர் விநியோகம் , புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவைப்படும் 71 ஓட்டுநர்கள் வழங்கும் பணியினை M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy நிறுவனத்தார் மூலம் நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ. 728/- என்ற ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 01.10.2023 முதல் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை இறுதி செய்திடும் வரை தொடர்ந்து பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்து, மேற்படி பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவீனத்தை 2023-24ம் ஆண்டு வருவாய் நிதி செலவீனங்கள் ஊதியம் தலைப்பில் - கூலி இதர இனத்திற்கு என்ற கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.3200.00 இலட்சத்தில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**<u>இ5/4472/2023(மையம்)</u>**

**தீர்மானம் எண்:654 பொருள் :21 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:22**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மினி ஜெட்ராடர் வாகனம் – 5 எண்கள் மற்றும் கனரக ஜெட்ராடர் வாகனம் – 8 எண்கள் ஆக மொத்தம் 13 எண்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு, ந.க.எண்.21191/2022/அம்ருட்–2, நாள்:28.12.2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து புதிதாக 8 எண்ணிக்கை LCV mounted De–silting வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

Tamilnadu Government Gazette Published Date:12.08.2022, The Tamilnadu prohibition of Employment as manual Scavengers and their Rehabilitation Ruls, 2022– Annexure Vல் புதைவடிகால் ஆள் இறங்கு குழிகளில் மனித ஆற்றல் இறங்குவது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் உரிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரம் மூலம் அப்புறப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதைவடிகால் ஆள் இறங்கு குழிகளில் உள்ள மண்துகள்களை அகற்றி, சாலை ஓரங்களில் குவித்துவைப்பதால், மண்துகள்கள் காற்றில் பறந்து காற்று மாசு ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, புதை வடிகால் ஆள் இறங்கு குழிகளில் சேகரமாகும் மண்துகள்களை தூர்வாரி சேகரித்து, உடனுக்குடன் எடுத்துச்சென்று அப்புறப்படுத்த De–silting வாகனங்கள் பயன்படுத்தபடுகின்றன. மேற்படி 13 எண்கள் ஜெட்ராடர் வாகனங்களுக்கு, 8 எண்கள் De–silting வாகனங்கள் மட்டுமே உள்ளன. மீதமுள்ள 5 எண்கள் ஜெட்ராடர் வாகனங்களுக்கு 5 எண்கள் De–silting வாகனங்கள் தேவைப்படுகின்றன.

மேற்படி, தேவைப்படும், புதைவடிகால் ஆள் இறங்கு குழிகளில் சேகரமாகும் மண் துகள்களை அப்புறப்படுத்த தூர்வாரும் வாகனங்கள் (LCV mounted de–Silting Vehicle) – 5 எண்ணிக்கை கீழ்கண்ட விவரப்படி வாங்கிக்கொள்ளலாம்.

| Sl. No | Description | Qty | Rate in Rs. | Amount in Rs. | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | Supply and delivery of LCV mounted De-Silting vehicle - 5 Nos | 5 Nos | 15,00,000.00 | 75,00,000.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு, ந.க.எண்.21191/2022/ அம்ருட் –2, நாள்:28.12.2021. |
| **Total** | | | | **75,00,000.00** | |

எனவே, மேற்கண்ட விபரப்படி புதைவடிகால் ஆள் இறங்கு குழிகளில் சேகரமாகும் மண் துகள்களை அப்புறப்படுத்த தூர்வாரும் வாகனங்கள் (LCV mounted De-Silting vehicle) – 5 எண்ணிக்கை ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் 15வது மத்திய நிதிக் குழு 2022–23ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ .2200.00 இலட்சத்திலிருந்து, வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. புதைவடிகால் ஆள் இறங்கு குழிகளில் சேகரமாகும் மண் துகள்களை அப்புறப்படுத்த தூர்வாரும் வாகனங்கள் (LCV mounted De-Silting vehicle) - 5 எண்ணிக்கை ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு, மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, கருத்துரு அனுப்பியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவினத்தை 15வது மத்திய நிதிக் குழு 2022–23ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ .2200.00 இலட்சத்திலிருந்து, மேற்கொள்ள அனுமதிக்கலாம்

இ5/ 6771/2023(மை)

**தீர்மானம் எண்:655 பொருள் :22 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:23

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு தொடர்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் கழிவு செய்வதற்கு நிறுத்தப்பட்ட கீழ்கண்ட வாகனங்களுக்கு இயக்குநர் , மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை , வேளச்சேரி, சென்னை அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்: H1/3812/2023, நாள்:31.05.2023. (Quasi govt–Premature Condemnation)ல் இன்றைய மதிப்பினை நிர்ணயம் செய்து கழிவாணையினை வழங்கியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் , அவ்வாகனங்களை "உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் விற்பனை செய்ய 18.08.2023 அன்று நடைபெற்ற தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் சட்டம் 1998ம் அடிப்படையில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில், மின்னணு முறையி ல் ஒப்பந்தப்புள்ளி எவரும் சமர்பிக்கவில்லை மற்றும் நேரடியாக மாநகராட்சி மைய அலுவலக பொறியியல் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட 5 நபர்களின் ஒப்பந்தப்புள்ளிகள், கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டு பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வாகன விபரம் | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட தொகை (ரூபாய்) | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | | | | உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை விபரம் | | வல்லுநர் குழுவின் மதிப்பைக் காட்டிலும் கூடுதல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **M/S. C.N.G. Traders, 58,M.K. Street, Palakarai, Trichy-8** | **M/s.S.M. Nallaselli Traders,72, Golden Nagar, Varaganery, Trichy-08** | **M/s.Jayaraj & Co, 218/247, Chinnasamy Nagar, Tennur, Trichy-17** | **M/s.D.J. Traders, 5E, Madurai Road, Palakarai, Trichy-08** | **M/s.Limra Traders No.5, 13th Alavar Thoppu, Palakarai, Trichy.** | பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூபாய்) | | |
| | | | EMD ரூ.40000 | EMD ரூ.65000 | EMD ரூ.85000 | EMD ரூ.35000 | EMD ரூ.85000 | | | தொகை (ரூபாய்) | சதவிகிதம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | | 10 (9-3) | 11 |
| 1 | **TN 45 BC 0184 - COMPACTOR** இன்ஜின் எண்: **CYHZ105849** சேஸிஸ் எண்: **MB1AWJFC9CRYF9375** **EMD:ரூ.35000** | 139000 | 241222 | 233184 | 207565 | **255099** | 185000 | M/s.D.J. Traders, 5E, Madurai Road, Palakarai , Trichy-08 | **255099** | 116099 | 83.52 |
| 2 | **TN 45 AP 3889- 2 CUM Tipper** இன்ஜின் எண்: **6EPJJ094067** சேஸிஸ் எண்: **MA7MT15DJJU000147** **EMD:ரூ.10000** | 39000 | | | **52677** | | 45000 | M/s.Jayaraj & Co, 218/247, Chinnasamy Nagar, Tennur, Trichy-17 | **52677** | 13677 | 35.07 |
| 3 | **TN 45 AP 3863 2 CUM Tipper** இன்ஜின் எண்: **6EPJJ094081** சேஸிஸ் எண்: **MA7MT15DJJU000145** **EMD:ரூ.10000** | 37000 | | | **58767** | | 42000 | | **58767** | 21767 | 58.83 |
| 4 | **TN 45 AP 2143 -2 CUM Tipper** இன்ஜின் எண்: **6EPHJ093678** சேஸிஸ் எண்: **MA7MT15DHJU000124** **EMD:ரூ.10000** | 38000 | | 42786 | **63767** | | 42000 | | **63767** | 25767 | 67.81 |
| 5 | **TN 45 AP 3845 -2 CUM Tipper** இன்ஜின் எண்: **6EPJJ094004** சேஸிஸ் எண்: **MA7MT15DJJU000146** **EMD:ரூ.10000** | 42000 | | 43789 | **63847** | | 45000 | | **63847** | 21847 | 52.02 |
| 6 | **TN 45 AP 3859- 2 CUM Tipper** இன்ஜின் எண்: **6EPJJ094079** சேஸிஸ் எண்: **MA7MT15DJJU000151** **EMD:ரூ.10000** | 39000 | | 42786 | **60570** | | 42000 | | **60570** | 21570 | 55.31 |
| | **கூடுதல்** | **334000** | | | | | | | **554727** | **220727** | **66.06** |

மேற்படி அட்டவணை வரிசை எண். 1 முதல் 6 வரை குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களுக்கு பத்தி எண்.9ன் படி வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை,அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக பத்தி எண்.10ல் கண்டுள்ளவாறு இருப்பதால், உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை (GST @ 18% ) ஊர்ஜிதம் செய்திட மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு தொடர்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் கழிவு செய்வதற்கு நிறுத்தப்பட்ட 6 வாகனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகைகள் அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக இருப்பதால், பத்தி எண்.9ல் குறிப்பிட்டுள்ள உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேலும் இவ்வாகனங்களை உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைக்கவும், மேற்படி வாகனங்களை சம்மந்தப்பட்ட இருப்பு பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்யவும் ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/15270 /2022(மையம்)

**தீர்மானம் எண்:656 பொருள் :23 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:24**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் 4.00 க.மீ கொள்ளளவுள்ள சென்சார் பொருத்தப்பட்ட COVID-19 Proof Semi – Underground Bins – 175 எண்ணிக்கைகள் மற்றும் இதனை கையாள தேவையான 05 எண்ணிக்கை (GPS கருவி பொருத்தப்பட்ட) நவீன வகை Trucks with knuckle boom crane & bin emptying mechanism வாகனங்கள் வழங்கும் பணியினை மேற்கொள்ள M/s.Zonta Infratech Private Limited, நிறுவனத்தற்கு 6 மாத காலம் அவகாசம் அளித்து 26.02.2021 தேதியில் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. முதற்கட்டமாக, செயல் திட்ட அறிக்கை 23.03.2021ந் தேதி மேற்படி நிறுவனத்தார் சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து ரூ.72,02,169/– ஒப்பந்த விதிகளின்படி வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காலம் முடிந்த பின்னும் நிறுவனத்தாரிடமிருந்து எந்தவிதமான பணிமுன்னேற்றமும் இல்லாத காரணத்தினால், 31.08.2021 மற்றும் 22.11.2021 தேதிகளில் முறையே முதல் மற்றும் இரண்டாவது அறிவிப்புகள் வழங்கப்பட்டும் பணி இதுநாள்வரை மேற்கொண்டு முடிக்கப்படவில்லை. மேலும், பணி மதிப்பீட்டில் 25% தொகை ரூ.3,50,00,000/–ஐ திரும்ப பெறக்கூடிய அபராதமாக விதித்தும் மேற்படி பணியினை 05.06.2022ந் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டுமென 09.05.2022 தேதியில் மூன்றாம் அறிவிப்பு வழங்கப்பட்டது. இதற்கு மேற்படி நிறுவனத்தார் 25% தொகைக்கு பதிலாக 5% தொகையினை பிடித்தம் செய்து கொள்ள வேண்டி பதில் கடிதத்தில் தெரிவித்திருந்தார். அதன்பின்னரும் மேற்படி பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததால் 18.08.2022 மற்றும் 10.01.2023 ஆகிய தேதிகளில் முறையே 4 மற்றும் 5வது அறிவிப்பு கடிதங்கள் வழங்கப்பட்டது.

மேற்படி திட்டபணியினை விரைந்து முடித்திட Semi – Underground Bins – 175 எண்ணிக்கை மற்றும் இதனை கையாள தேவையான நவீன வகை Trucks with knuckle boom crane & bin emptying mechanism with GPS வாகனங்கள் 5 எண்ணிக்கைக்கு பதிலாக குறைந்த பட்சம் Semi – Underground Bins – 40 எண்ணிக்கை மற்றும் இதனை கையாள தேவையான நவீன வகை Trucks with knuckle boom crane & bin emptying mechanism with GPS வாகனங்கள் 2 எண்ணிக்கை மட்டும் மதிப்பீடு ரூ.4,00,00,000/–ல் வழங்குமாறு நேரில் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தினால் 40 எண்ணிக்கை sensor based semi earth bin குப்பைத்தொட்டிகள் மட்டும் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி நிறுவப்பட்டுள்ள sensor based semi earth bin குப்பைத்தொட்டிகளை கையாள தேவையான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட நவீன வகை Trucks with knuckle boom crane & bin emptying mechanism with GPS வாகனங்கள் –2 எண்கள் இதுநாள் வரை வழங்கப்படவில்லை. நிறுவப்பட்ட குப்பைத்தொட்டிகள் தற்போது மாநகராட்சி பயன்பாட்டில் உள்ள கனரக வாகனங்கள் மூலம் கையாள இயலாது. இதனால், நிறுவப்பட்டுள்ள sensor based semi earth bin குப்பைத் தொட்டிகள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது . எனவே மேற்படி நிறுவப்பட்டுள்ள குப்பைத்தொட்டிகளை, கையாளுவதற்கு தேவையான 2 வாகனங்களை உடனடியாக வழங்குமாறு பல முறை நிறுவனத்தாரிடம் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், மேற்படி நிறுவனத்தார் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட நவீன வகை Trucks with knuckle boom crane & bin emptying mechanism with GPS வாகனங்கள் –2 எண்கள் வழங்கிட இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால், நிறுவப்பட்டுள்ள sensor based semi earth bin குப்பைத் தொட்டிகள் பயன்படுத்த இயலாததால் மாநகராட்சிக்கு பொதுமக்களிடம் அவப்பெயர் ஏற்படும் நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே, M/s.Zonta Infratech Private Limited, 1st Floor Reliaable - phoenix towers, No.16 &16/1, Museum Road,Bangalore - 560 001 முகவரியிட்ட நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்திடவும், மேற்படி நிறுவனத்தார் இதுவரை பெற்ற பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகைகள் ரூ.1,25,14,689/–ஐ (ரூ.10,68,914/- + ரூ.67,23,422/- + ரூ.47,22,353/- = ரூ.1,25,14,689.00) மாநகராட்சி கணக்கில் சேர்ப்பதோடு மேற்படி நிறுவனத்தினை கருப்புப் பட்டியலில் சேர்த்திடவும் மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் 4.00 க.மீ கொள்ளளவுள்ள சென்சார் பொருத்தப்பட்ட COVID-19 Proof Semi – Underground Bins – 175 எண்ணிக்கைகள் மற்றும் இதனை கையாள தேவையான 05 எண்ணிக்கை (GPS கருவி பொருத்தப்பட்ட) நவீன வகை Trucks with knuckle boom crane & bin emptying mechanism வாகனங்கள் வழங்கும் பணியினை மேற்கொள்ள M/s.Zonta Infratech Private Limited, Bangalore–01 நிறுவனத்தினுடன் மேற்கண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்திட அனுமதி அளிக்கலாம்.
2. M/s.Zonta Infratech Private Limited, Bangalore–01 நிறுவனத்திடம் இதுவரை பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகைகளின் கூடுதல் ரூ.1,25,14,689/–ஐ (ரூ.10,68,914/- + ரூ.67,23,422/- + ரூ.47,22,353/- = ரூ.1,25,14,689.00) மாநகராட்சி கணக்கில் சேர்த்திட அனுமதி அளிக்கலாம்.
3. M/s.Zonta Infratech Private Limited, 1st Floor Reliaable - phoenix towers, No.16 &16/1, Museum Road,Bangalore - 560 001 முகவரியிட்ட நிறுவனத்தினை கருப்புப் பட்டியலில் சேர்த்திட அனுமதி அளிக்கலாம்.

**இ5/10451/2020(மையம்)**

**தீர்மானம் எண்:657 பொருள் :24 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:25**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022–23ன் கீழ் , இப்பணிகளை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண்.90, நாள்.26.05.2023ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 141 / 2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 25.07.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் IV, வார்டு எண் 54, 60,62, மற்றும் 63க்குட்பட்ட, பொன்னகர், குமுளி தோப்பு, கோரிமேடு தெரு, ஆதி திராவிடர் தெரு, காஜாமலை காலனி, அம்மன் நகர், டோபி காலனி, எடமலைப்பட்டி புதூர், சாத்தனூர் மேல தெரு, நேதாஜி நகர், ஆகிய பகுதிகளில் புதிதாக 20 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் – 02 எண்கள், 40 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் – 11 எண்கள், 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் – 06 எண்கள், ஆகியவற்றை வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணி **மதிப்பீடு ரூ. 1.60 இலட்சம்** **இ6/11667/2022 (மையம்)** | 1, மெசர்ஸ். பாலாஜி எலட்ரிக்கல்ஸ் திருச்சி, 0.04% குறைவு<br><br>2.மெசர்ஸ்.சபரி எலட்ரிக்கல்ஸ்., சென்னை 0.37% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பாலாஜி எலட்ரிக்கல்ஸ் திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் IV, வார்டு எண் 61 மற்றும் 64க்குட்பட்ட JK நகர் பாலாறு தெரு, புவனேஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் புதிதாக 40 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் – 16 எண்கள், 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 2 எண்கள் மற்றும் தெருவிளக்கு கட்டுபாட்டு கருவி 1 எண் ஆகியவற்றை வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணி<br>மதிப்பீடு ரூ. 2.00 இலட்சம்<br>இ6/2066/2023 (மையம்) | 1, மெசர்ஸ். பாலாஜி எலட்ரிக்கல்ஸ் திருச்சி,<br>0.04% குறைவு<br><br>2. மெசர்ஸ். சபரி எலட்ரிக்கல்ஸ்., சென்னை<br>0.49% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பாலாஜி எலட்ரிக்கல்ஸ் திருச்சி,** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் IV, மைய அலுவலகத்தில் உள்ள 21 எண்கள் கண்காணிப்பு (CCTV) கேமராக்களை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்<br>மதிப்பீடு ரூ.1.50 இலட்சம்<br>இ6/3549/2023 (மையம்) | 1, M/s. Seamless Communication Systems (P) ltd., Chennai<br>0.08% குறைவு<br><br>2, M/s. V Link Systems (P) Ltd., Chennai<br>0.24% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. Seamless Communication Systems (P) ltd., Chennai** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. வார்டு குழு அலுவலகம் IV தீர்மானம் எண் 90 நாள் 26.05.2023 இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் கு றைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 11667 / 2022 ( மையம்)**

**தீர்மானம் எண்:658 பொருள் :25 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:26**

திருச்சிராப்பள்ளி மாந கராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மான எண் 29, நாள். 02.05.2023ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 135/2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 25.07.23 அன்று பெ றப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் வயர்லெஸ் கருவிகளை இயக்க புதிதாக Digital Repeater 4 எண்கள், பேட்டரி சார்ஜர்கள் 12 எண்கள் UPS மற்றும் பேட்டரிகள் 4 எண்கள் ஆண்டனா 4 எண்கள், Microwave radio 8 எண்கள். Modems 4 எண்கள், கேபிள்கள் WPC licence Processing Charge மற்றும் இதர மின்னணு உபகரணங்களை புதிதாக வழங்கி உயர் கோபுரங்களில் பொருத்தி இயக்கி தரும் பணி<br>**மதிப்பீடு ரூ. 40.00 இலட்சம்** | 1. M/s. Pat & Venky Systems Pvt Ltd Chennai<br>9.02% கூடுதல்<br>(25.08.2023ம் தேதியின் விலைகுறைப்பு கடிதத்தின் வாயிலாக மதிப்பீட்டைக் காட்டிலும் **0.01 % குறைவு**)<br><br>2. M/s. Seamless communication systems, Pvt, Ltd Chennai<br>**22.03% கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. Pat & Venky Systems Pvt Ltd Chennai chennai நிறுவணம்** மதிப்பீட்டைக் காட்டிலும் **9.02%** கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், தனது 25.08.2023ம் தேதிய விலைகுறைப்பு கடிதத்தில் மேற்படி பணியினை மதிப்பீட்டைக் காட்டிலும் **0.01% குறைவாக** செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மான எண் 29, நாள். 02.05.2023 ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களது முன்அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ6/1211/ 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:659 பொருள் :26 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:27**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023-24ன் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் I ன் தீர்மான எண் 23, நாள். 28.06.2023 ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 170/2023-24 ன் வாயிலாக 08.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I, வார்டு எண் 06க்குட்பட்ட மாம்பழச்சாலை பழைய காவேரி பாலத்தில் உள்ள பாதாள சாக்கடை பிரதான உந்து குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் ஏர் வால்வு பொருத்தும் பணியினை மேற்கொள்ளுதல்<br>**மதிப்பீடு ரூ. 4.45 இலட்சம்**<br>**இ6/3602/2023 (மையம்)** | 1,மெசர்ஸ். விஸ்வா இன்ப்ராடெக்சர்ஸ், கன்னியாகுமரி<br>0.11% குறைவு<br>2,திரு. ஜி.ஜி. சக்திவேல் திருச்சி<br>0.38% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். விஸ்வா இன்ப்ராடெக்சர்ஸ், கன்னியாகுமரி நிறுவனத்தார்** மதிப்பீட்டைக் காட்டிலும் 0.11 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I, வார்டு எண் 13க்குட்பட்ட அண்ணாசிலை அருகில் பழுதடைந்துள்ள 600 எம் எம் விட்டமுள்ள குழாய் பொருத்தும் பணி மற்றும் சாலை நெடுஞ்சாலை துறையை சார்ந்துள்ளதால் சிமெண்ட தளம் அமைத்து தரும் பணியினை மேற்கொள்ளுதல்<br>**மதிப்பீடு ரூ. 3.20 இலட்சம்**<br>**இ6/3603/2023 (மையம்)** | 1,மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராடெக்சர்ஸ், கன்னியாகுமரி<br>0.08% குறைவு<br>2, திரு. ஜி.ஜி. சக்திவேல் திருச்சி<br>0.27% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். விஸ்வா இன்ப்ராடெக்சர்ஸ், கன்னியாகுமரி நிறுவனத்தார்** மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I, வார்டு எண் 05க்குட்பட்ட திருவாணைக்கோவில் டிரங்ரோடு காந்திசாலை சந்திப்பு முதல் செக்போஸ்ட் வரை நெடுஞ்சாலை துறைமூலம் சாலை அகலப்படுத்தும் பணி மேற்கொள்வதால் இப்பகுதியில் உள்ள கழிவுநீர் தொட்டி மற்றும் உந்துநிலையத்தின் சேகரிப்பு கிணறு ஆகியவற்றை சாலையின் மட்டத்திற்கு உயர்த்தி கட்டும் பணியினை மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ.6.65 இலட்சம் இ6/3449/2023 (மையம்)** | 1,திரு.பென்னோ சகாயராஜ் திருச்சி 0.02% குறைவு<br><br>2,திரு.ஆர். வெள்ளைசாமி திருச்சி 0.65 அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. பென்னோ சகாயராஜ் அவர்கள்** மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1, வார்டு குழு அலுவலகம் I ன் தீர்மான எண் 23, நாள். 28.06.2023 ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 3602 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:660 பொருள் :27 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:28**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023-24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் தீர்மான எண். 60, நாள். 11/07/2023 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 192 / 2023-24 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 18.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலம் 5 வார்டு எண் 22க்குட்பட்ட தில்லைநகர் 7 கிராஸ் அருகில் AtoB அருகில் ஏற்பட்டுள்ள கழிவுநீர் உந்து குழாய் உடைப்பினை சரிசெய்யும் பணி **மதிப்பீடு ரூ.5.20 இலட்சம் இ6/4504/2023 மையம்** | 1,M/s.Vishwa Infrastructure, Kannniyakumari 0.07% குறைவு<br><br>2,திரு.ஜி.ஜி. சக்திவேல், திருச்சி 0.09% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. Vishwa Infrastructure, Kanniyakumari** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண் 12,13 மற்றும் 15க்குட்பட்ட பகுதிகளில் உள்ள புதைவடிகால் ஆள் நுழைவு தொட்டிகளில் உள்ள குறுமணல் அகற்றும் பணி **மதிப்பீடு ரூ.8.00 இலட்சம்** **இ6/5129/2023 மையம்** | 1, திரு. திருமலைச்சாமி, திருச்சி 0.06% குறைவு<br>2, M/s. Hari Constructions , திருச்சி 1.15% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. திருமலைச்சாமி, திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் IV, வார்டு எண் 54க்குட்பட்ட பெரியமிளகு பாறை, நாயக்கர் தெருவில் அமைந்துள்ள புதைவடிகால் உந்து நிலையத்தில் மராமத்து பணி **மதிப்பீடு ரூ.8.40 இலட்சம்** **இ6/4496/2023 மையம்** | 1,மெசர்ஸ்.பவர் எலட்ரிக்கல் ஒர்க்ஸ் , திருச்சி 0.13% குறைவு<br>2, மெசர்ஸ். கே.வி.எஸ். எலட்ரிக்கல், திருச்சி 0,52% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பவர் எலெக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்., திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.13 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. பணிக்குழுவின் தீர்மானம் எண் 60 நாள் 11.07.2023 இப்பணிக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் க ண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 4504 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:661 பொருள் :28 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:29**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் 5ன் தீர்மானம் எண்.45, நாள்.26.05.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 146 / 2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 27.07.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் V, வார்டு எண் 28க்குட்பட்ட குத்பிஷா நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் உள்ள புதைவடிகால் தொட்டிகளில் தேங்கியுள்ள குறுமணல் அகற்றுதல் மற்றும் புதைவடிகால் தொட்டிகளில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ. 4.65 இலட்சம்** | 1,திரு.கே.ராமசாமி, திருச்சி 0.01% குறைவு<br>2,திரு.ஆர்.ராமதாஸ் திருச்சி 0.86% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. கே. ராமசாமி., திருச்சி** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. வார்டு குழு அலுவலகம் 5ன் தீர்மானம் எண் 45 நாள் 26,05.2023 இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒ ப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 5127 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:662 பொருள் :29 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:30**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண்.102 நாள்.28.06.2023ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 179 / 2023–24 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 08.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் IVக்குட்பட்ட, மைய அலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை துணை இயக்குநர் அறை மற்றும் உதவி ஆணையர் (பணிகள்) அறை ஆகியவற்றில் 2 எண்கள், புதிதாக குளிர்சாதன இயந்திரங்கள் வழங்கி பொருத்தும் பணி, பீமநகர் மருந்தகம், மத்திய பேருந்து நிலையம் பயணியர் தங்கும் விடுதி மற்றும் விருந்தினர் மாளிகை, இளநிலைப்பொறியாளர் வார்டு குழு அலுவலகம் IV பிரிவு 1 அறை, CMSC அறை மற்றும் Survekshan data collection அறை ஆகியவற்றில் மின் வயரிங் மற்றும் Data Cabling வயரிங் பணி செய்ய தேவையான மின் உபகரணங்களை புதிதாக வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணி<br>**மதிப்பீடு ரூ 7.80 இலட்சம்**<br>**இ6/5314/2023 மையம்** | 1,மெசர்ஸ்.பவர் எலட்ரிக்கல் ஒ ர்க்ஸ், திருச்சி<br>0.23% குறைவு<br>2,மெசர்ஸ். கே.வி.எஸ். எலட்ரிக்கல், திருச்சி<br>0.47% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பவர் எலெக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்., திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.23 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் IV வார்டு எண் 53க்குட்பட்ட ஒத்தக்கடை உயர் மின்னழுத்த தலைமை (MPS–1) கழிவு நீர் உந்து நிலையத்தில் Semi automatic Closed type ODOUR REMOVAL Dosing Unit – 1 எண் மற்றும் இதர மின் உபகரணங்களை புதிதாக வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணி<br>**மதிப்பீடு ரூ.8.35 இலட்சம்**<br>**இ6/5463 /2023மையம்** | 1,மெசர்ஸ்.பைரவா என்டர்பிரைசஸ், தஞ்சாவூர்<br>0.10% குறைவு<br>2,மெசர்ஸ்.அஸ்மா பிரஸ்சிங் பிரைவேட் லிமிடெட் மதுரை<br>2.14% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பைரவா என்டர்பிரைசஸ், தஞ்சாவூர்** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் IVக்குட்பட்ட மைய அலுவலகத்தில் புதிதாக 2MP கண்காணிப்பு கேமிரா 5 எண்கள், பொருத்தி அதனை தற்போது இயங்கி வரும் Network Systemத்துடன் இணைக்கவும், மேலும் 64Ch NVR–1 எண், 8,0 TB Hard disk – 4 எண்கள் அதற்குண்டான இதர மின் உபகரணங்களை புதிதாக வழங்கி பொருத்தி இதனை ICCC Network Systemத்துடன் இணைத்து இயக்கி தரும் பணியினை மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ.5.25 இலட்சம்** **இ6/5542/2023 மையம்** | 1,M/s.Seamless Communication system (P) Ltd Chennai 0.22% குறைவு<br><br>2. M/s. V Link Systems (P) Ltd. Chennai 1.61% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் , **M/s. Seamless Communication system (P) Ltd Chennai,** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.22 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் IV தீர்மானம் எண் 102 நாள் 28.06.2023 இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 5314 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:663 பொருள் :30 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:31**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் I ன் தீர்மான எண்.17 நாள்.28.06.2023ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 160 / 2023–24 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 02.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந் தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் / ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I, வார்டு எண் 6 க்குட்பட்ட சாலையோர கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 15HP மின்மோட்டார் – 1 எண், வார்டு எண் 12 க்குட்பட்ட மேல சிந்தாமணி உயர் மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள 80HP – மின்மோட்டார் – 1 எண், ஆகியவற்றில் பழுதாகியுள்ள உதிரி பாகங்களை மாற்றி பழுது நீக்கம் செய்து தரும் பணி **மதிப்பீடு ரூ. 4.80 இலட்சம்** | 1, மெசர்ஸ். விக்னேஷ் எலட்ரிக்கல்ஸ், திருச்சி 0.08% குறைவு<br><br>2,மெசர்ஸ்.ஸ்டார் என்ஜினியரிங், திருச்சி 1.06% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். விக்னேஷ் எலட்ரிக்கல்ஸ் திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் I தீர்மானம் எண் 17 நாள் 28.06.2023 இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 5315 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:664 பொருள் :31 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:32**

இம்மாநகராட்சி கட்டுப்பாட்டில் அமைந்துள்ள மண்டலம் –IV பகுதிகளிலுள்ள 41 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்தல், பேக்கிங் செய்தல், வால்வு பழுதுநீர் செய்தல் மற்றும் சோடியம் ஹைப்போ குளோரைட் செலுத்தும் கருவிகளை 01.10.2019 முதல் ஓராண்டிற்கு பராமரிப்பு செய்திட மற்றும் பணியாளர்கள் சம்பளம் உட்பட மதிப்பீடு ரூ.97.40 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.140, நாள்.03.04.2020ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் 14.08.2019ல் பெறப்பட்டு, மெசர்ஸ்.ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி எண்.513, நாள்.25.09.2019ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில், 01.10.2019 முதல் மேற்கண்ட நிறுவனம் 41 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் கடந்த 30.09.2022 உடன் (3 ஆண்டுகள்) பொன்மலைக் கோட்ட பகுதிகளிலுள்ள 41 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை பராமரிக்கும் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இப்பணியினை மேற்கொள்ள பிரிவு வாரியாக 3 கோப்புகளாக பிரிக்கப்பட்டு, புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மாமன்றத்தின் தீர்மான எண்.284, 285, 286, நாள்.29.11.2022 வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு, 10.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 01.03.2023 முதல் 28.02.2024 வரையிலான காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தொடர்ந்து, 01.10.2022 முதல் 28.02.2023 வரை மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மேற்கண்ட மண்டலம் –IV பகுதிகளிலுள்ள 41 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரித்து வந்துள்ளமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், ஏற்கனவே வழங்கி வந்த மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.8,10,000/– **வீதம் 5 மாதங்களுக்கு (01.10.2022 முதல் 28.02.2023 முடிய உள்ள காலத்திற்கு) ஏற்பட்ட செலவினம் ரூ.40,50,000/–**ஐ செலவு செய்து கொள்ள, அனுமதி கோரி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. 01.10.2022 முதல் 28.02.2023 முடிய 5 மாதங்களுக்கு பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தாருக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.140, நாள்.30.04.2020ல் அனுமதிக்கப்பட்ட மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.8,10,000/– வீதம் 5 மாதங்களுக்கு ஏற்படும் செலவின தொகை ரூ.40,50,000/– ஐ செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2023–24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) குடிநீர் வழங்கு பணிகள் – பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
4. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ4/5055/2019/மையம்**

**தீர்மானம் எண்:686 பொருள் :53 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:54**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – III, வார்டு எண்,42, ஆலத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள (1) காரை குளம் (2) மஞ்சத்திடல் குளம் ஆகியவற்றில் மீன் வளர்த்து பிடித்து விற்பனை செய்து கொள்ளும் உரிமத்திற்கு 20.07.2023 அன்று முதல் முறையாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே இரண்டாவது முறையாக 11.08.2023 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கலந்து கொண்டவர்கள் விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

**(I) குத்தகை இனத்தின் பெயர் :–**

வார்டு எண்.42 ஆலத்தூர் காரைகுளத்தில் மீன் வளர்த்து பிடித்து விற்பனை செய்யும் உரிமம்.

(அ) பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

(ஆ) ஒப்பந்தப்புள்ளியில் இருவர் கலந்து கொண்டனர்.

| வ. எண் | குத்தகை இனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | பொறுப்பு தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.42 ஆலத்தூர் காரைகுளத்தில் மீன் வளர்த்து பிடித்து விற்பனை செய்யும் உரிமம் | 1. திரு.M.C.முருகன் த/பெ.சந்திரசேகரன் 1/139, அக்ரஹாரம், ஆலத்தூர், திருச்சி – 11 | 25000/– | ரூ.100000/– வரைவோலை எண்.156212 நாள்.09.08.2023 பாரத ஸ்டேட் வங்கி, திருச்சி. |
| | | 2, திரு.ம.புண்ணியமூர்த்தி த/பெ. மருதமுத்து 2/57, அம்பேத்கார் நகர் கீழகல்கண்டார் கோட்டை திருச்சி–11 | 22000/– | ரூ.100000/– வரைவோலை எண்.156213 நாள்.09.08.2023 பாரத ஸ்டேட் வங்கி, திருச்சி. |

**(II) குத்தகை இனத்தின் பெயர் :–**

(1) வார்டு எண்.42, மஞ்சத்திடல் கிராம குளத்தில் மீன் வளர்த்து பிடித்து விற்பனை செய்யும் உரிமம்.

(அ) பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

(ஆ) ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

எனவே மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

இனம் 1ல் கண்ட வார்டு எண்.42, ஆலத்தூர் காரை குளத்தில் மீன் வளர்த்து பிடித்து விற்பனை செய்யும் உரிமத்திற்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M.C.முருகன் அளித்துள்ள ஒப்பந்தப் புள்ளியானது திரு.ம.புண்ணியமூர்த்தி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை விட ரூ.3000/– கூடுதலாக உள்ளது. இக்குத்தகை இனமானது புதியதாக வார்டு குழு மண்டலம்–IIIல் சேர்க்கப்பட்டு மாநகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் பெருக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே இக்குத்தகை இனத்தை திரு.M.C.முருகன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்ய மாமன்ற அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இனம் 1ல் கண்ட வார்டு எண் .42, ஆலத்தூர் காரை குளத்தில் மீன் வளர்த்து பிடித்து விற்பனை செய்யும் உரிமத்திற்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள் ளிகளில் திரு.M.C.முருகன் அளித்துள்ள ஒப்பந்தப் புள்ளியானது திரு .ம.புண்ணியமூர்த்தி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை விட ரூ .3000/– கூடுதலாக உள்ளது. இக்குத்தகை இனமானது புதியதாக வார்டு குழு மண்டலம் –IIIல் சேர்க்கப்பட்டு மாநகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் பெருக்கம் ஏ ற்பட வாய்ப்பு உள்ளது . எனவே இக்குத்தகை இனத்தை திரு.M.C.முருகன் என்பவருக்கு ஒப்படைக்கலாம்.
2. மேற்கண்ட குத்தகை இனத்தை ஏல விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பொது கட்டுபாடுகள், தனி கட்டுப்பாடுகள், சிறப்பு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு மீன்பிடித்து விற்பனை செய்யவும் , பாராமரிக்கவும், ஒப்படைப்பு செய்யலாம்.
3. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தவும் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**அ1/1686/2023/ம.கு.III)**

**தீர்மானம் எண்:687 பொருள் :54 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:55**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் – III, வார்டு எண்.35–க்குட்பட்ட திருச்சி– தஞ்சை மெயின் ரோட்டில் பதிக்கப்பட்டுள்ள 400 எம்.எம் விட்டமுள்ள AC குழாய் மூலம் 4 எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு உந்தப்பட்டு, அப்பகுதிவாழ் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் திருச்சி –தஞ்சை மெயின் ரோடு, ஜெகநாதபுரம் அருகில் குழாயில் உடைப்பு ஏற்பட்டு சாலையில் விணாகச் செல்கிறது. அதனை சரிசெய்து ஜெகநாதபுரம் பழையது மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு 80mm விட்டமுள்ள குடிநீர் உந்து குழாயாக உள்ளதால், குடிநீர் உந்துவதில் சிரமமாக உள்ளதால் அதனை அகற்றிவிட்டு, புதியதாக 150 mm விட்டமுள்ள GI pipe அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ்** உடன் பணி செய்ய, இப்பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%** குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 8620 /2023 / மையம்)**

**தீர்மானம் எண் :688 பொருள் :55 வார்டு எண்.35 என்பதற்கு பதில் வார்டு எண்.36 என்ற திருத்தத்துடன் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:56**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கலெக்டர் வெல் எண்.1 மற்றும் கலெக்டர் வெல் எண். II ஆகியவைகளில் 75 மற்றும் 100 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு அதன் மூலம் சராசரியாக முறையே 20.00 மற்றும் 21.00 மில்லியன் லிட்டர் குடிநீர் தரைமட்ட கிணறுக்கு உந்தப்பட்டு அதன் மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு அனுப்பப்பட்டு பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நீர்ப்பணி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் இரும்பு தாது நிறைந்த மண் படிமங்கள் அதிக அளவில் உள்ளது. இது நீள்சுற்றுகுழாய் வழியே நீர்ப்பணி நிலையத்தின் கிணற்றுக்குள் புகுந்து பம்பு செட் பகுதிகளான காலம் பைப்கள், சாப்டுகள், ஸ்பைடர்கள் மற்றும் பவுல் அசெம்பிளி ஆகியவற்றில் படிந்து பம்ப் செட்டின் குடிநீர் உந்தும் திறனை குறைத்து விடுகிறது. இதனால் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நீர்ப்பணி நிலையங்களில் உள்ள மின் மோட்டார் பம்புசெட்டுகளை முழுவதுமாக பிரித்து சுத்தம் செய்து, நீர் உந்தும் திறனை பெருக்கி குடிநீர் உந்தும் பணியை மேற்கொள்ளவும், இந்நீர்பணி நிலையங்கள் அமைக்கப்பட்ட பகுதிகள் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இடமாக உள்ளதாலும், இருள் சூழ்ந்து காணப்படுவதாலும் 90வாட்ஸ் கொண்ட LED மின் விளக்குகள் 65 No's நீர்ப்பணி நிலைய வளாகப்பகுதியில் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்ததின் தரப்படுத்தப்பட்ட விலை விகித பட்டியலின் விலை மற்றும் உள்ளூர் விலைப்புள்ளிகளை கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.18.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ்** உடன் பணி செய்ய, இப்பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06%** குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 8621 /2023 / மையம்)**

**தீர்மானம் எண்:689 பொருள் :56 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:57**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கலெக்டர் வெல்– ஆளவந்தான் படித்துறை மற்றும் கலெக்டர் வெல் எண்.3 ஆகியவைகளில் 75 மற்றும் 120 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு அதன் மூலம் சராசரியாக முறையே 11.00 மற்றும் 20.00 மில்லியன் லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு உந்தப்பட்டு பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நீர்பணி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் இரும்பு தாது நிறைந்த மண் படிமங்கள் அதிக அளவில் உள்ளது. இது நீள்சுற்றுக்குழாய் வழியே நீர்ப்பணி நிலையத்தின் கிணற்றுக்குள் புகுந்து பம்பு செட் பகுதிகளான காலம் பைப்கள். சாப்டுகள், ஸ்பைடர்கள் மற்றும் பவுல் அசெம்பிளி ஆகியவற்றில் படிந்து பம்ப் செட்டின் குடிநீர் உந்தும் திறனை குறைத்து விடுகிறது. இதனால் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர், சீராக வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்நீர்ப்பணி நிலையங்களில் உள்ள மின் மோட்டார் பம்புசெட்டுகளை முழுவதுமாக பிரித்து சுத்தம் செய்து, நீர் உந்தும் திறனை பெருக்கி குடிநீர் உந்தும் பணியை மேற்கொள்ளவும், கலெக்டர்வெல் நீர்பணி நிலையம் 3. அமைக்கப்பட்ட பகுதி பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இடமாக உள்ளதாலும், இருள் சூழ்ந்து காணப்படுவதாலும் 90வாட்ஸ் கொண்ட 25 No's LED மின் விளக்குகள் நீர்ப்பணி நிலைய வளாகப்பகுதியில் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விகித பட்டியலின் விலை மற்றும் உள்ளூர் விலைப்புள்ளிகளை கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.17.35 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ்** உடன் பணி செய்ய, இப்பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06%** குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 8622 /2023 / மையம்)**

**தீர்மானம் எண்:690 பொருள் :57 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:58**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–5, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கேர் கல்லூரி வளாகத்தில் கடந்த ஜீலை 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநில அளவிலான வேளாண் கண்காட்சி–2023–க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மதிப்பிற்குரிய அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் வேளாண்துறை பிரமுகர்கள், விவசாயிகள் ஆகியோர் வருகை தருவதை முன்னிட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, ந.க.எண்.181/2023/ஜி3, நாள்.25.07.2023ல், போதிய அளவில் நிரந்தர மற்றும் தற்காலிக கழிவறை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில், கேர் பொறியியல் கல்லூரியில் 27.07.2023 முதல் 29.07.2023 வரை 3 தினங்களுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் நடமாடும் கழிப்பறை வசதிகள் அமைத்து கொடுப்பதற்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து, பெறப்பட்ட விலைப்புள்ளிகளை கொண்டு மதிப்பீடு ரூ.9.45 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, விதிகள் 2023, பிரிவு 57(7)ன் கீழ்** உடன் பணி செய்ய, இப்பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.24%** குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி** நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 8637 /2023 / மையம்)**

**தீர்மானம் எண்:691 பொருள் :58 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 59**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு எண்.20–க்குட்பட்ட மரக்கடை மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் மூலம் வார்டு எண் 18, 19, 20, 30 மற்றும் 31க்குட்பட்ட பகுதிவாழ் பொதுமக்களுக்கு சீரான முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் புதிதாக மரக்கடை மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு கம்பரசம்பேட்டை தலைமை நீர்ப்பணி நிலையத்தில் இருந்து செல்லும் 400 எம்.எம் விட்டமுள்ள பிரதான வால்வு (bypass) பழுதடைந்து சாலையில் குடிநீர் வீணாகச் சொல்கிறது. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, புதிதாக 450 எம்.எம் விட்டமுள்ள butterfly valve பொருத்தி, வால்வு தொட்டி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.5.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, விதிகள் 2023 பிரிவு 57(7)ன் கீழ்** உடன் பணி செய்ய, இப்பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%** குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 8794 /2023 / மையம்)**

**தீர்மானம் எண்:692 பொருள் :59 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:60**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் IV, வார்டு எண் 62க்குட்பட் பஞ்சப்பூர் பகுதியில் 48.00 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் உந்து குழாயில் நீரின் வேகவிசை காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளது. மாநகராட்சியின் மொத்த கழிவு நீரும் இந்த குழாயின் வழியாக செல்கிறது. மேலும் உடைப்பு ஏற்பட்ட இடத்திற்கு அருகில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ12.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.06%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Power Electrical Works, Trichy** ஒப்பந்ததாரர் மூலம், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7) கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/4494/2023 மையம்**

**தீர்மானம் எண்:693 பொருள் :60 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:61**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் V, வார்டு எண் 8க்குட்பட்ட உறையூர் குழுமணி ரோடு பகுதியில் குடமுருட்டி ஆற்றுபாலத்தின் அருகில் உள்ள சாலை குறுகாலக இருப்பதாலும், உறையூர் மீன் சந்தைக்கு வரும் கனரக வாகனத்தினாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் இவ்விடமானது, மாநகராட்சியின் முக்கிய பகுதியாகவும் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் நலன் கருதி அனைத்து மக்களும் கடந்து செல்லும் பகுதியாக உள்ளதால், இவ்விடத்தில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 8க்குட்பட்ட உறையூர் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே லிங்கம் நகர் அருகில் குழுமணி ரோடு முதல் தியாகராஜ நகர் வரை RCC பாலம் கட்டும் பணி. | 252.00 |
| | **மொத்தம்** | **252.00** |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணியினை ரூ. 252.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் உரிய கருத்துரு அனுப்பி நிர்வாக அனுமதி பெறுவதற்கு அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. மதிப்பீடு ரூ.252.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து நிதியுதவி பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை அனுமதிக்கலாம்.

**இ6/9798 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்:694 பொருள் :61 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 62**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண். 3, வார்டு எண்.39 மற்றும் 40க்குட்பட்ட நியூடவுன் முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள கவுரு வாய்க்காலின் குறுக்கே இரண்டு பகுதியையும் இணைக்கும் வகையில் 5 மீட்டர் அகலமுள்ள உயர்மட்ட பாலம் கட்டும் பணிக்கு ரூ.200.00 இலட்சத்தில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறுவதற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் எண். 43 நாள். 24.06.2023ல் அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி திட்டப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 21062/2023/SS2 நாள்.30.08.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி, மூலதன மான்ய நிதி ( CGF 2023–24 Phase II) –யின் மதிப்பீடு ரூ.1.31 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் செ ன்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந .க.எண். 21062/2023/SS2 நாள்.30.08.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**இ7/ 6500 /2023(மையம்)**

**தீர்மானம் எண்:695 பொருள் :62 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**PROCEEDINGS OF THE DIRECTOR OF MUNICIPAL ADMINISTRATION, CHENNAI - 28.**
**PRESENT:S. SIVARASU, I.A.S.,**

நகரப் பொறியாளர் - 1 SEP 2023

**Roc.No.21062/2023/SS2** **Dated:30.08.2023**

**Sub:** **Capital Grant Fund 2023-24 (Phase 2)** - Common Project Sanctioning and Monitoring Committee approved – various works in Municipalities and Corporations – Administrative sanction – accorded– Reg.

**Read:**
1. G.O.(Ms) No.60, Finance(SFC-MC) Department, Dated:28.02.2023.
2. Minutes of the Meeting of the 4th Common Project Sanctioning and Monitoring Committee for Capital Grant Fund and O & M Gap Filling Fund (2023-2024) held on 28.06.2023.

*******

**ORDER:**

In the reference 1st cited, the Government has issued Orders based on the recommendation of Sixth State Finance Commission, and in the reference 2nd read above, Government has communicated the copy of the Minutes of the 4th Common Project Sanctioning and Monitoring Committee Meeting held on 08.08.2023 for the Capital Grant and Operation & Maintenance Gap Filling Fund for the year 2023-24.

Approval accorded by the Common Project Sanctioning and Monitoring Committee for CGF by its minutes of the meeting in the 2nd cited, the Administrative Sanction is hereby accorded for the works annexed with this proceedings.

The works should be commenced immediately by following the TTT Act 1998 and relevant rules 2000 without any delay with the condition that any necessary approval from other Government Departments etc., should be obtained before submitting for the technical sanction from the competent authority.

**Fund Release:**

50% of the funds will be released on issuing the work order to the successful bidder. 40% of the funds will be released based on the further progress of the work. Remaining 10% of funds will be released after submitting the completed work photos, UC and CR.

**The following Conditions should be adopted by the ULBs in addition to the existing provisions / guidelines already issued.**

- The Municipality / Corporation should not change the work or scope of the approved work without the approval of Director of Municipal Administration.
- The tenders should be finalized duly observing the Tamil Nadu Transparency in Tenders Act, and all other relevant rules in force.
- The G.O.(Ms).No.94, Finance (Salaries) Department, Dated:30.03.2023 regarding e-tendering should be scrupulously followed while inviting tenders.
- G.O.(Ms)No.158 Municipal Administration and Water Supply Department, dated.02.11.2022 should be scrupulously followed while giving technical sanction and during tender invitation by the ULBs under the control of DMA.
- Newspaper advertisements for tenders for these road works shall be issued by the tender inviting authorities in Corporations/ Municipalities.
- The Commissioner concerned shall send the tender notification to all the registered contractors of the ULBs as well as contractors of other departments such as Highways, PWD, TNHB, etc.
- Publish the tender notification in the State/ District Tender Bulletin (as applicable) and publish the tender documents in all relevant website.
- The Commissioners should take photographs of each of the works during execution and after completion should maintain an album for the works taken up under this fund.
- All the works should be completed within the time line prescribed. In the event of undue delays in the finalization of tenders or commencement of works or completion of works or the works implemented being of poor quality, the Sanctioning Committee reserves the right to cancel this sanction order wholly or in part, and reallocate the funds from such poorly performing Corporations / Municipalities to other better performing Corporations/ Municipalities.

- If there are any savings in the amount allotted for the ULB, ULB shall not take up new works on its own. If it is raised, the Commissioner shall send a new proposal to the Director of Municipal Administration for placing the proposal before the Sanctioning Committee for its approval.

The receipt of the proceeding should be acknowledged.

**Encl:** Annexures 1 to 6.

Sd./- S. Sivarasu
Director of Municipal Administration

**To:**
1.The Corporation Commissioners
Coimbatore/Trichy /Tiruppur/Kancheepuram
2.Municipal Commissioners
Ramanathapuram/Tiruchengode

**Copy to:**
1. The Regional Director of Municipal Administration
   Madurai / Salem
2. C.E / S.E / JD(S) / EE / AEE / AE of this office.
3. Assistant, "IT" Section.
4. "SS2" Stock File.

//Forwarded by Order//

Joint Director (Schemes)

30/8/23

**File No: 21062/2023/SS2,**

**Dated: 30.08.2023**

**Annexure - 2**

**Trichy Corporation**

**Works Sanctioned under CGF 2023-24 in 4th CPS&MC**

**(Rs. in Crore)**

| Sl. No | Name of the Work | Amount Approved in CGF-2023-24 |
|---|---|---|
| 1 | Construction of 5m Span High Level Bridge at Kavuru Karai Channel in new Town Muthu Nagar in Ward No.40 | 1.31 |

Sd./- S. Sivarasu
Director of Municipal Administration

//Forwarded by Order//

Joint Director (Schemes)

30/8/23

**பொருள்: 63**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே புதைவடிகால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் பகுதிகளில் அன்றாடம் வரும் கழிவு நீரை அந்தந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் உந்து நிலையங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு தலைமை கழிவு நீர் உந்து நிலையத்திற்கு உந்தப்பட்டு அங்கிருந்து பஞ்சப்பூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு உந்தப்படுகிறது. இதன் படி நாள் ஒன்றுக்கு சராசரியாக 58MLD கழிவு நீர் உந்தப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட விபரப்படி கழிவு நீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது

| வ.எண் | மண்டலம் | கழிவு நீர் உந்து நிலையங்களின் விவரம் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) | தலைமை கழிவு நீர் உந்து நிலையம் ( MPS) | துணை கழிவு நீர் உந்து நிலையம் (SPS) | சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் (Lifting) | |
| 1 | வார்டு குழு அலுவலகம் –I | - | - | 13 | 23 | **36** |
| 2 | வார்டு குழு அலுவலகம் –II | - | 1 | 5 | 1 | **07** |
| 3 | வார்டு குழு அலுவலகம் –IV | 1 | 1 | 3 | 1 | **06** |
| 4 | வார்டு குழு அலுவலகம் –V | - | - | 5 | 2 | **07** |
| | **மொத்தம்** | **1** | **2** | **26** | **27** | **56** |

மேற்கண்ட விபரப்படி இம்மாநகராட்சியில் தற்போது இயங்கி வரும் பஞ்சப்பூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்– 1 எண், தலைமை கழிவு நீர் உந்து நிலையங்கள் – 02 எண்கள், துணை கழிவு நீர் உந்து நிலையங்கள் – 26 எண்கள், சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்கள் – 27எண்கள் ஆகியவை தற்போது தனியார் நிறுவனங்கள் மூலம் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூன்றாம் ஆண்டு பராமரிப்பு காலம் எதிர்வரும் 31.12.2023 உடன் முடிவடையவுள்ளது. இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் மீண்டும் தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்க கீழ்காணும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | கழிவு நீர் உந்து நிலையங்கள் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை ஓராண்டுக்கு |
|---|---|---|---|
| **1.** | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் I–க்குட்பட்ட 13 எண்கள் துணை கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் 23 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/ 9722 /2023/மையம்** | 36 எண்கள் | ரூ.210.00 இலட்சம் |
| 2. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் – II–க்குப்பட்ட தலைமை கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண், துணை கழிவு நீர் உந்து நிலையம்– 5 எண்கள் மற்றும் சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண்கள் ஆகியவற்றை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/9723/2023/மையம்** | 7 எண்கள் | ரூ.70.00 இலட்சம் |
| 3. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் – IV–க்குப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் – 01 எண், தலைமை கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண், துணை கழிவு நீர் உந்து நிலையம்– 3 எண்கள் மற்றும் சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண்கள் ஆகியவற்றை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/9724/2023/மையம்** | 6 எண்கள் | ரூ.65.00 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 4. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் V–க்குட்பட்ட 5 எண்கள் துணை கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் 2 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி.<br>**இ6/9725/2023/மையம்** | 7 எண்கள் | ரூ.60.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **56 எண்கள்** | |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விபரப்படி கழிவு நீர் உந்து நிலையங்களை தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனம் வசம் ஒப்படைத்து ஓராண்டிற்கு இயக்கி பராமரிக்கும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு ( EPF உட்பட ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று இப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட அட்டவணை வரிசை எண் 01 முதல் 04 வரையில் காணும் பணிகளுக்கு தயாரிக்கபட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி கழிவு நீர் உந்து நிலையங்களை இயக்கி பராமரிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரி முடிவு செய்து தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் வரை தற்போது இயக்கி பராமரித்து வரும் தனியார் நிறுவனங்களின் மூலம் தற்போதைய பராமரிப்பு தொகையிலேயே மாற்றம் ஏதும் இன்றி தொடர்ந்து இயக்கி பராமரித்து வர ஒப்புதல் அளிக்கலாம்.
3. இப்பணிக்கு புதிதாக தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு முதலாம் ஆண்டு இயக்கி,பராமரிக்கவும், தேர்வு செய்யப்படும் நிறுவனம் நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து மொத்தத்தில் மூன்று ஆண்டுகள் ஒவ்வொரு ஆண்டிற்கும் (முதல் ஆண்டு நீங்கலாக) அந்தந்த ஆண்டு பராமரிப்பு தொகையில் 10 % உயர்த்தி வழங்கவும் ஒப்புதல் வழங்கலாம்.
4. இச்செலவினத்தை 2023–24ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கணக்கு தலைப்பு எண்:230–50–01–ல் கழிவு நீர் அகற்றல் மற்றும் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.600.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**(இ6/9722/2023 (மையம்)**

**தீர்மானம் எண்:696 பொருள் :63 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 64**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் தீர்மானம் எண்.41, நாள்.11,07,2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 203 / 2023–24 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 29.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண். 28க்குட்பட்ட குழுமிக்கரை மற்றும் சிவபிரகாசம் சாலை சந்திப்பு பகுதியில் உள்ள சாலையினை தார்பேட்ச் மூலம் சீரமைக்கும் பணி<br>**மதிப்பீடு ரூ.6.00 இலட்சம்** | 1, திரு.எஸ். பெரியசாமி, திருச்சி<br>0.11% குறைவு<br><br>2 திரு. பி. வேலுசாமி திருச்சி<br>0.80% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எஸ். பெரியசாமி, திருச்சி** நிறுவனத்தாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.11 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. பணிக்குழுவின் தீ ர்மானம் எண் 41 நாள் 11.07.2023 இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் கு ழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/ 4480 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:697 பொருள் :64 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 65**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, அண்ணா நகர் இணைப்பு சாலையிலிருந்து உய்யகொண்டான் கரை சாலை வரை வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் தேவையான ஒப்பந்தப்புள்ளி படிவம், வரைபடம், Design. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஆகியவைகளை திட்ட கலந்தலோசகர் (DPR Consultant) மூலம் தயார் செய்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று, விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.175/2023–24ன் வாயிலாக 17.08.2023 அன்று கோரப்பட்டு, நிர்வாக காரணங்களுக்காக 25.08.2023 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகளை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Preparation of DPR for proposed construction of over bridge from Anna nagar link road to shore road in Uyyakondan channel<br><br>**மதிப்பீடு ரூ.9.75 இலட்சம்** | 1. M/s.Vistar AEC Consultants LLP, Bengaluru<br>0.10% குறைவு<br>2. M/s.Transheight Consultants Pvt. Ltd., Bengaluru<br>மதிப்பீட்டு விலையில் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Vistar AEC Consultants LLP, Bengaluru ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறி ப்பிட்டுள்ளவாறு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ4/6823/2023/ மையம்**

**தீர்மானம் எண்:698 பொருள் :65 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 66**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்–4, வார்டு எண்.54, ராஜா காலனியிலிருந்த உய்யகொண்டான் கரை சாலை வரை வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் தேவையான ஒப்பந்தப்புள்ளி படிவம், வரைபடம், Design. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஆகியவைகளை திட்ட கலந்தலோசகர் (DPR Consultant) மூலம் தயார் செய்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று, விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.176/2023–24ன் வாயிலாக 17.08.2023 அன்று கோரப்பட்டு, நிர்வாக காரணங்களுக்காக 25.08.2023 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகளை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Preparation of DPR for proposed construction of over bridge from Raja colony to shore road in Uyyakondan channel<br><br>மதிப்பீடு ரூ.9.75 இலட்சம் | 1. M/s.Vistar AEC Consultants LLP, Bengaluru<br>0.10% குறைவு<br><br>2. M/s.Transheight Consultants Pvt. Ltd., Bengaluru<br>மதிப்பீட்டு விலையில் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Vistar AEC Consultants LLP, Bengaluru ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்க லாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள் ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ4/6824/2023/ மையம்**

**தீர்மானம் எண்:699 பொருள் :66 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 67**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்–4, வார்டு எண்.53க்குட்பட்ட பாரதிதாசன் சாலையில் உள்ள மைய அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் தேவையான ஒப்பந்தப்புள்ளி படிவம், வரைபடம், Design. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஆகியவைகளை திட்ட கலந்தலோசகர் (DPR Consultant) மூலம் தயார் செய்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று, விருப்புணர்வு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.177/2023–24ன் வாயிலாக 17.08.2023 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகளை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Preparation of DPR for proposed Additional construction of Corporation main office building at Corporation main premises in ward no.53.<br><br>மதிப்பீடு ரூ.9.85 இலட்சம் | 1.M/s.Vijay Architects திருச்சி<br>0.20% குறைவு<br><br>2. திரு.P.சந்திரநேசன், திருச்சி<br>0.20% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Vijay Architects, **திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.20 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

2, இப்பணியின் அவசர அவசியம் கருதி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ4/6825/2023/ மையம்**

**தீர்மானம் எண்:700 பொருள் :67 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 68**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் III ன் தீர்மான எண் 27, நாள். 31.07.2023ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 212/2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 01.09.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் III, 41,42 மற்றும் 44 க்குட்பட்ட திருவெறும்பூர், மஞ்சதிடல், மற்றும் மேலகல்கண்டார் கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள வரிவசூல் மையத்தில் பொருத்தப்பட்டுள்ள 3.5 KVA ஆன்லைன் யூ.பி.எஸ் உடன் இணைக்கப்பட்டிருக்கும் பழைய 12 V, 100 AH பேட்டரிகளை அகற்றிவிட்டு புதிதாக 12 V, 100 AH பேட்டரிகளை வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணியினை மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ. 0.84 இலட்சம் இ6/6195/2023 (மையம்)** | 1. மெசர்ஸ். பி.எஸ்.எல் ஏஜென்ஸி., திருச்சி 0.36% குறைவு<br><br>2. மெசர்ஸ். கே.வி.எஸ் எலட்ரிக்கல்ஸ், திருச்சி 2.15% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பி.எஸ்.எல் ஏஜென்ஸி., திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.36 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் III வார்டு எண் 44, மற்றும் 45க்குட்பட்ட மேலகல்கண்டார் கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இளநிலைப் பொறியாளர் அலுவலகம் ஆகிய பகுதிகளில் புதிதாக 3.0/1,0 UPS மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் 12 V, 100 AH பேட்டரிகளை வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணியினை மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ. 3.30 இலட்சம் இ6/6419/2023 மையம்** | 1. மெசர்ஸ். பி.எஸ்.எல் ஏஜென்ஸி., திருச்சி 0.28% குறைவு<br><br>2. மெசர்ஸ். கே.வி.எஸ் எலட்ரிக்கல்ஸ், திருச்சி 1.31% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பி.எஸ்.எல் ஏஜென்ஸி., திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.28 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் III ன் தீர்மான எண் 27, நாள். 31.07.2023 ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 6195 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:701 பொருள் :68 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 69

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் நிர்வாக அனுமதி தீர்மானம் எண் 67, நாள். 11.07.2023 ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 182/2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 08.08.2023 அன்று பெறப்பட்ட ஒப்ப நதப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I,II,IV மற்றும் Vக்குட்ட வார்டு குழு அலுவலகம், மேயர் குடியிருப்பு, ஆணையர் குடியிருப்பு, நகரப்பொறியாளர் குடியிருப்பு மற்றும் மத்திய மண்டி ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள IP CCTV Camera – 81 எண்கள் மற்றும் அதற்குண்டான இதர மின் உபகரணங்களான NVR, Hard Disk, POE Switch மற்றும் Network system ஆகியவற்றை ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் பராமரிக்கும் பணி மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ. 6.65 இலட்சம் | 1. M/S. Seamless Communications Systems (P) Ltd Chennai 0.29% குறைவு<br><br>2. M/s. V Link Systems (P) Ltd Chennai 2.49% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. Seamless Communications Systems (P) Ltd Chennai** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.29 சதவீதம் குறைவான ஒப்பந்தப்பு ள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1) பணிக்குழுவின் தீர்மான எண் 67, நாள். 11.07.2023 ல் இப்பணிக்கான மதிப்பீடுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 6557 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:702 பொருள் :69 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 70

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம் – 3க்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2023 – 24ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு பணிக் குழுவின் தீர்மானம் எண்.56, நாள்.11.07.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 147/2023–24 (வ.எண்.2)ன் வாயிலாக 27.07.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் – III, வார்டு எண்.36க்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.201 கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கட்டும் பணி.<br>மதிப்பீடு. ரூ.14.00 இலட்சம் | 1)திரு.கே.ஆர்.பி.சரவணன் திருச்சி. **0.05 % குறைவு**<br><br>2) திரு.சி. தனபால், திருச்சி. **1.20 % கூடுதல்** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.கே.ஆர்.பி.சரவணன் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) பணிக் குழுவின் தீர்மானம் எண் .56, நாள்.11.07.2023ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 5249 / 2023 (மையம்)**

**தீர்மானம் எண்:703 பொருள் :70 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 71**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ், கீழ்க்கண்டுள்ள பணிக்கு மாண்புமிகு மேயர் அவர்களது நிர்வாக அனுமதி எண்.48 நாள்.01.08.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து , ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 202 / 2023–24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 29.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மண்டலம்–4, வார்டு எண்.61க்குட்பட்ட டி.எஸ்.என் அவென்யூ, மெயின் ரோடு (ஆல்பா பள்ளி முதல் குடோன் சாலை வரை) புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டித் தரும் பணி<br>**மதிப்பீடு ரூ.32.35 இலட்சம்** | 1. திரு.G.வெங்கடேஷ், திருச்சி<br>0.05% குறைவு<br><br>2. மெசர்ஸ். JT builders, திருச்சி<br>1.20 % அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.G.வெங்கடேஷ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1, மேற்கண்டுள்ள பணிக்கு மாண்புமிகு மேயர் அவர்களது நிர்வாக அனுமதி எண்.48 நாள்.01.08.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 7160/2023 / மையம்**

**தீர்மானம் எண்:704 பொருள் :71 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 72**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதி களில் பொது நிதி 2023–24ன் கீழ் , இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் தீர்மானம் எண்.49, நாள். 11.07.2023 ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 184 / 2023–24 ன் வாயிலாக 08.08.2023 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் / ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
